போன் நெ. 15. விலை 2 அணா. REGD No. 4842

திராவிடநாடு

மலர் 13 | 22–5–55 | இதழ் 46

பரபரப்பான செய்தியென்று கருதுகிறது, முதலாளித்துவ கூடாரம்! இம்மாதத்துக்குள் ரஷ்யத் தலைவர்கள், யுகோஸ்லோவேகியா சென்று, டிட்டோவுடன் பேச்சு வார்த்தை நடத்தப்போகிறார்களாம். பொதுவுடைமைக் கொள்கைகளோடு வளரும் யுகோ, தன்னிச்சைப்படி காரியங்களைச் செய்கிறது என்பதற்காக ரஷ்யா 1948ல் தொடர்பைத் துண்டித்துக்கொண்டது. அதனால், ரஷ்யாவின் சகாக்களில் ஒருவர் குறைந்துவிட்டதாக அமெரிக்காவும் பிரிட்டனும் கருதின. டிட்டோவுக்குப் பிரிட்டன், தன்னாட்டுக்கு அழைத்து பெருமித வரவேற்பும் அளித்தது. அந்த டிட்டோவை, இப்போது ரஷ்யத் தலைவர்கள் சந்தித்து உறவைப் பலப்படுத்திக்கொள்ளப் போகின்றனராம். 'ஸ்டாலின்' இறந்தபிறகு, யுகோவுக்கும் ரஷ்யாவுக்குமிடையே நேசம் வளரும் அறிகுறி தென்பட்டது–1953ல் இருநாடுகளும் அரசியல் தூதர்களையும் பரிமாறிக்கொண்டன. ஸ்டாலினுக்குப் பிறகு பிரதமராகிய மாலங்கோவும் அவருக்குப் பிறகு பிரதமராகியிருக்கும் புல்கானினும், யுகோவுடன் நட்பை வளர்க்கும் அறிகுறியைக் காட்டி வந்தனர். இப்போது, நேரே யுகோ சென்று டிட்டோவுடன் பேச்சு வார்த்தை நடத்தப் போகின்றனர் என்பதைக் கேட்டதும் மேலைய நாடுகள் பரபரப்படைகின்றன. பல யூகங்களைக் கணிக்கின்றன. ரஷ்யாவிலிருந்து, பிரதமர் புல்கானின், கம்யூனிஸ்டுக் கட்சிச் செயலாளர் குருஷ்செவ், 'பிராவ்தா' ஆசிரியர் ஷெபிலாவ், துணைப்பிரதமர் மிகோயன், வெளிநாட்டு வியாபார மந்திரி குமீகின் ஆகிய முக்கிய தலைவர்கள், யுகோ செல்ல விருக்கின்றனர். அவர்களில் இருவரே இவர்கள்! கையில் தொப்பியுடன் இருப்பவர், கட்சியை ஆளும் செயலாளர் குருஷ்செவ். தலையில் தொப்பியுடன் காட்சி அளிப்பவர் அரசாளும் பிரதமர் மார்ஷல் புல்கானின்.

திராவிடநாடு 22—5—55

அர்ச்சனை

அண்ணாதுரை

''சகலருக்கும் சாமான்யமாகச் சித்திக்கக்கூடியதோ! தேவானுக்ரஹம் இல்லாமல், இப்படிப்பட்ட சேவா உணர்ச்சி ஏற்படத்தான்முடியுமா? எல்லாம் பகவத் கடாட்சம், வேறென்னவாக இருக்கமுடியும்! முகத்திலே ஒரு திவ்ய தேஜஸ் தெரிகிறது பாரும், என்னவென்று எண்ணுகிறீர் அதனை. பகவத் கடாட்சம் பரிபூரணமாகக் கிடைத்திருக்கிறது என்று அர்த்தம். பால பருவம்—முப்பது என்று கூறுகிறார்கள், ஆனால், நேரிலே பார்த்தால், அப்படித் தோணாது. உள்ளத்திலே சத்ய தேவதை எழுந்தருளி இருப்பதாலே முகத்திலேஒரு திவ்யஜோதி இருக்கிறது. பேச ஆரம்பித்தால், அடா அடா! தேனும் பாலும் கலந்து தருவதுபோல இருக்கிறது. என்ன கெம்பீரம்! அதேபோது எவ்வளவு கனிவு! எதிரிகளின் வாதங்களைத் துவம்சம் செய்கிற சமர்த்து இருக்கிறதே, ஆஹாஹா! பிரம்மிக்கச் செய்கிறது. வெறும் புத்தகப் படிப்பினால் வரக்கூடிய பாண்டித்யமா இது. அபசாரம், அபசாரம்! வண்டி வண்டியாக தர்க்க சாஸ்திரங்களையும், கிரந்தங்களையும், புராண இதிகாசங்களையும் கரைத்துக்குடித்தவர்கள் ஏராளமானவர்கள் இருக்கிறார்களே! இவர், அரும்பு மீசைக்காரர், அவ்வளவு புத்தகங்களைப் படித்துப் பரிபக்குவம் பெறுவதற்கான வயது ஆகவில்லை; எனினும், பேச ஆரம்பித்தால், சரஸ்வதி தாண்டவமாடுகிறாளே! சாமான்யாளுக்குச் சாத்தியமோ!! இவருடைய உபன்யாசத்தின் பலனாக, உருப்படாத விஷயங்களிலே மனதை இலயிக்கச் செய்துவிட்டு, கண்டதே காட்சி கெர்ண்டதே கோலம் என்று இருந்துவரும் நாஸ்திகக் கூட்டம் நிச்சயமாக நல்லறிவு பெற்று, பக்தி மார்க்கத்திலே ஈடுபட்டு, சத்புருஷாளாகப் போகிறா—சர்வேஸ்வரன் இந்தப் பால சன்யாசியைப் பூலோகத்திலே இந்தக் கைங்கரியத்தைச் செய்வதற்காகவே அனுப்பி இருக்கிறார். சம்சயமே வேண்டாம். அதர்மம் தலைதூக்கும்போதெல்லாம், தர்மத்தை இரட்சிக்க, பகவான், ஆழ்வாராதிகளையும் நாயன்மார்களையும் பூலோகத்துக்கு அனுப்பிவைப்பது, நமது புண்ய பூமியிலே நடைபெறும் காரியமல்லவா! அதே முறையிலே, இப்போது கலிமுற்றி, கண்டபடி பேசி, இதற்கென்ன காரணம், அதற்கென்ன அர்த்தம், இது எப்படிப் பொருந்தும், அதற்கு என்ன ஆதாரம் என்று கேட்டுக் கேட்டு, பாபத்தைக் கக்கிக்கொண்டு ஒரு கூட்டம் இருப்பது கண்டு, பகவான், இனியும் இப்படிப்பட்ட கூட்டத்தை வளரவிடக்கூடாது என்று தீர்மானித்து, அவர்களைச் சம்ஹரித்து, சத்யதேவதைக்கு மகுடாபிஷேகம் செய்துவைக்கும்படி, பாலசன்யாசியாரைப் பூலோகத்துக்கு அனுப்பிவைத்திருக்கிறார். பகவானுடைய பிரசாதம் நமக்குக் கிடைத்திருக்கிறது. அவருடைய திருவருளை நாமெல்லாம் பெற்று, திவ்யானந்தம் கண்டு, மங்களகரமாக வாழப்போகிறோம். நமது புராதன மதம், மறுபடியும் 'ஜாஜ்வல்யமாக'ப் பிரகாசிக்கப் போகிறது. ஆதி சங்கரர் அவதரித்துப் பாஷாண்டி மதத்தை அடக்கி ஒடுக்கி, பாரத் வர்ஷத்திலே நமது இந்து மதத்தைக் காப்பாற்றினதுபோல, ஞானசம்பந்தர், மணிவாசகர்போன்ற நாயன்மார்கள் தோன்றி, தலைவிரித்தாடிய சமண மார்க்கத்தைச் சம்ஹாரம் செய்து, சைவத்தை மீண்டும் ஸ்தாபித்ததுபோல,இராமானுஜர்போன்றஆழ்வார்கள் அவதாரம் செய்து, வைஷ்ணவ மார்க்கத்தை, வம்பர்களிடமிருந்து காப்பாற்றியதுபோல, இந்த மகான், நாஸ்திகர்களின் கொட்டத்தை அடக்கி, நமது புராதன மார்க்கத்தை, ஆஸ்திகத்தை, கோடி சூரியப் பிரகாசம் உள்ளதாக்கப்போகிறார். அவருக்குச் சம்பூர்ண ஜெயம் உண்டாகும்படி, பகவான் அருள்பாலித்திருக்கிறார். எனவே, அவருடைய உபதேசத்தைக் கேட்பதிலே பிரம்மானந்தம் ஏற்படுகிறது. அவருடைய உபன்யாசங்களுக்குப் பக்தர்கள் கடல்போலக் கூடுவதைக் காணும்போது தேவாமிருதம் உண்டால் ஏற்படக்கூடிய சந்தோஷம் உண்டாகிறது.''

குன்றக்குடி அடிகளாரின் 'தொண்டு' துவக்கப்பட்டபோது, ஆலயங்களிலே அதிகாரிகளாக வீற்றிருந்துகொண்டு, ஆஸ்திகத்தின் பாதுகாவலர்கள் என்ற நிலையை, நாடு தங்கட்குப் 'பட்டாமணியம்' ஆக்கிவிட்டதாகக் கருதிக்கொண்டிருந்த கூட்டம், மேலே குறிப்பிட்டபடி, 'அர்ச்சனை' செய்தது! அடிகளார் மீது அன்பும் மதிப்பும் பிறந்ததால் அல்ல, அவருடைய தொண்டு சிலாக்கியமானது என்ற நம்பிக்கையினாலும் அல்ல, அவருடைய 'பாண்டித்யம்' பாராட்டப்படத்தக்கது என்ற உள்ளுணர்வாலும் அல்ல. அவர், 'தமக்காக'ப் பாடுபடுகிறார், அவருடைய தொண்டும் பாண்டித்யமும், சிதைந்து சின்னாபின்னமாகிவரும் தங்கள் செல்வாக்கை மீண்டும் புதுப்பிக்கப் பயன்படும் என்ற 'சுயநலம்' அவர்களை அவ்விதம் அர்ச்சிக்கவைத்தது. அடிகளாரின் தமிழ்நடை, பாராட்டப்பட்டது—அவருடைய அறநெறி புகழப்பட்டது—அவருடைய தொண்டுக்கு நன்றி கூறப்பட்டது—அவருடைய இலட்சியம் நிறைவேறும் என்று 'ஆசி' கூறப்பட்டது,

நாலுவேதம் ஆறு சாஸ்திரம் அறுபத்துநாலு கலைக்கியானம் என்றெல்லாம் ஒரு பட்டியல் தருகிறார்களே, அதனை ஓதி உணர்ந்து, பிறர் உணரத்தக்க வகையிலே எடுத்துரைக்க வல்ல, சாஸ்திர விற்பன்னர்கள் இருக்கத்தான்செய்கிறார்கள். ஒரு சுலோகத்துக்கு ஒன்பது வேறு வேறு விதமான பொருள் கூறவேண்டுமா—இருக்கிறார்கள்!! 'ஓம்' என்ற சொல்லுக்கு ஒரு மாதகாலம் அர்த்தம் கூறவேண்டுமா— கேட்பவர் சோர்ந்து சுருண்டு கீழே விழுகிற வரையில், சோர்விலாமல் கூறிடும் சொற்செல்வர்கள் இருக்கத்தான் செய்கிறார்கள்! இவர்கள் மட்டுமா! இந்தக் காரியம் கூடச் செய்யவேண்டிய தேவையில்லை, எமது பார்வையே பாவத்தைச் சுட்டெரிக்க வல்லது, எமது திருக்கரத்தால் திருநீறு பெற்றால் போதும் சிவனருள் தேடிவந்து சேரும், எமது திருச்சபையின் காட்சியையும், திருஉலாவின் மாட்சியையும் கண்டால்—கலிதீரும், ஊர் ஊர் சென்று உபதேசம் செய்தாகவேண்டும் என்பதில்லை, நாங்களே உபதேசம்தான், என்று கூறாமற்கூறி மேனிவாடாது வதங்காது, தோடுடைய செவியனாகி, வாடாமல்லிகைகளைத் தேடாமற் பெற்று திருவின் உருவாய் விளங்கும் திருக்கைலாய பரம்பரையினரும் உளர்! இவர்கள் யாரும் இதுநாள் வரை கூறாத புதுப் பொருளை, புது உண்மையை குன்றக்குடியார் எடுத்

துரைத்தார், இது நாள் வரையிலே, மனதிலே இருந்துவந்த சிக்கல் இவர் உரை கேட்டதும் தீர்ந்துவிட்டது, என்று கூறத்தக்க வகையிலே குன்றக் குடிகளார் கூறினர் என்பதல்ல—பிறர் திகைத்துத் திணறி, திண்டாடித் தேம்பி, திருவருள் நம்மைக் கைவிட்டு விட்டதோ என்று சிந்தாகூலராகி, நமது காலம் தீர்ந்துவிட்டது, பெற்ற தெளிவை மக்கள் இனி இழந்துவிட மாட்டார்கள், பெம்மானும் எம்மானும் உமக்குமட்டுமல்ல எமக்கும் சொந்தம் தான் என்று துணிந்து பேசத் தொடங்கிவிட்டார்கள், இனி நாம் நாட்களை எண்ணிக்கொண்டு இருந்து விடவேண்டியதுதான் என்று 'சோம்பிக்' கிடந்தபோது, அடிகள், கச்சையை வரிந்து கட்டிக்கொண்டு கிளம்பினர்! வாலிபம் மலைகளைத் தூளாக்கலாம், மடுவைக் கரத்தால் தடுக்கலாம், என்றெல்லாம் எண்ணச் செய்வதல்லவா! வாழ்க்கையின் வசீகரப் பருவம். கொற்றவனின் கூர்வாள் உயிரைக் குடித்துவிடும் என்ற அச்சம், குடிபுக இடம் தராமல், கோமளவல்லியிடம் காதலைப் பொழிந்த அம்பிகாபதி போல், சுற்றிலும் அகழி, அதிலே திறந்தவாய் முதலைகள், வழுக்குப்பாறை அதன் உச்சியில் வாட்போர் வீரர்கள் என்றெல்லாம் படைபலத்தைப் பற்றிக் கூறினாலும், அச்சம் கொள்ள மறுத்து அஞ்சா நெஞ்சுடன் பாய்ந்து செல்லும் வீரன்போல, வாலிபம் அடிகளைக் களம் செல்லத் தூண்டிவிட்டது—கோட்டைச் சாளரக் கதவின் வழியாக இதைக் காண்பவர்கள், ஆச்சரிய மடைந்தனர், சிலர் 'ஆசி' கூறினர், மெள்ள மெள்ளச் சிலர் ஆதரவு காட்டுவதாகக் கூறிக்கொண்டனர். —அடிகளாரின் 'வயது' பொற்பாதக் குறடு அணிந்து, பாதகாணிக்கை பெற்று வீற்றிருக்கும் போக்கை ஏற்றுக்கொள்ளாது, காவி அணியாத வராக இருந்திருப்பின், அவர் இதே சுறுசுறுப்பை இப்போது காட்டும் ஆர்வத்தைவிட அதிக அளவுடன், இப்போது பெறும் வெற்றியைவிட, நிரந்தரமான பலன் அளிக்கத்தக்க வெற்றியுடன்தொண்டுபுரியப்பொதுப் பணித் துறைக்கு வந்திருக்கக் கூடும். இப்போதோ!! எவ்வளவுதான் மனம் சுட்டாலும், இருப்பதை இழந்துவிட, அவர் என்ன புத்தரா!! எனவே இருக்கும் இடத்தின் இயல்புக்குத் தக்கபடி, பிறர் கண்டு வியக்கத்தக்க 'சேவை' செய்வோம் என்று எண்ணி, மதத்தைக் காப்பாற்றும் மாவீரர் என்ற நிலையைத்தமக்குத்தாமே ஏற்படுத்திக் கொண்டு மக்கள் மன்றத்திலே நடமாடுகிறார், சிற்சில இடங்களிலே படமெடுத்தாடவும் செய்கிறாராம்!! இவருடைய இந்தக் 'கோலம்' கண்டு, சோர்ந்துபோனவர்கள், 'ஆஹா ஹாரம்' செய்துகொண்டு அவர் பக்கம் வந்து நின்றனர்—ஆசிகூறி—ஆதரவு காட்டினர்—அர்ச்சனை செய்தனர். ஆலயத்திலே 'பூஜாரிக' ளாக அமர்ந்திருக்கும், 'பூதேவர்' களின் அர்ச்சனையில் ஒருபகுதியே துவக்கத்திலே இருப்பது.

'அது பேய்பிடித்தவீடு, அதிலே குடியிருந்தால், நள்ளிரவில் பேரரவம் கேட்கும், பீதியாலேயே மாள்வோர் உண்டு; சிறிதளவு மனதிடம் கொண்டோர் அரவம் கேட்டு அஞ்சாதிருப்பரேல், கரியதோர் உருவம் கிளம்பும், கால் பூமியில்படாது, கண்களில் நெருப்புக் கக்கும், கையும் காலும் எலும்பாக இருக்கும், அந்தக்காட்சியைக் கண்டாலே உயிர் போகும், இதனையும் பொருட்படுத்தாதிருப்பின், குரல்வளையைப் பிடித்து அழுத்திக் கொன்றேபோடும்''—என்று ஒரு பாழ் மாளிகை பற்றிய 'கதை' ஒன்று, கிலியின் விளைவாகவோ சூதுமதியினனின் கட்டுக்கதையின் பயனாகவோ, ஏற்பட்டுவிட்டால், பலரும் 'பேய்பிடித்த வீடு' என்று கூறுவர்—அந்த இடம் சென்று தங்க எவரும் முன்வாரார், ஒருவரிருவர் துணிந்து சென்று தங்கினாலும், காற்றிலே ஆடும் கொடி அவர்களின் கண்களை மிரட்டிடும், கதவு திறந்து மூடுவதால் எழும் கிறீச்சொலி அவர்களுக்குக் குலைநடுக்கம் ஏற்படுத்தும், தலைதப்பினால்போதும்என்றுஓடோடிச் செல்வர். இத்தகைய 'பேய்க்கதை' வெறும் புரட்டு, அல்லது மனமயக்கம், என்பதை விளக்கிக் காட்டிவிட்டால், பிறகு மக்கள் தெளிவு பெறுவர், மாளிகையின் பாழ்த்தன்மை ஒழிந்துபோகும், பிறகு அங்கு குடும்பமும் குதூகலமும் குடிஏறும், என்று எண்ணம் கொண்ட ஒரு நல்லவன், பேய்வீடு என்று பேசுவது ஆதாரமற்றது பேயாவது வீட்டைப் பிடித்தாட்டுவதாவது, பித்தரின் பேச்சு, அல்லது எத்தரின் ஏமாற்றுவித்தை என்றெல்லாம் பேசிவருகிறான்என்றால், அந்த மாளிகைக்குச் சொந்தக்காரராக இருப்பவருக்கு மட்டற்ற மகிழ்ச்சி ஏற்படத்தானே செய்யும்—மனதாரப் பாராட்டவும், சமயம் கிடைக்கும் போது உபசாரம் செய்யவும் முன் வரத்தானே செய்வார். அதுபோல, குன்றக்குடி அடிகளாருக்கு உபசாரம், பாராட்டு, அர்ச்சனை கிடைத்தது. மதத்தின் பெயரால் செய்யப்படும் அக்ரமங்களை, அனியாயங்களை, பொருள் விரயத்தை, புத்தி நஷ்டத்தை, சமுதாயத்திலே இதனால் ஏற்பட்டுவிட்ட சீர்கேடுகளைக் கண்டிக்கும் இயக்கம் நாட்டிலே இருக்கிறது. அதிலே கலந்து பணியாற்றும் நல்வாய்ப்பைப் பெற்றிருப்பதற்காக நாம் உண்மையிலேயே மகிழ்ச்சி கொள்ளுகிறோம். நாஸ்திக இயக்கம், கடவுளை எதிர்க்கும் கூட்டம், மதத்தை மாய்க்கும் மாபாவிகளின் கூட்டம் என்றெல்லாம், நம்மை நிந்தித்துக்கொண்டு மதத்தின் பெயரால் மந்தகாச வாழ்வு நடாத்திக்கொண்டு, அது தமக்கு மகேசன் தந்த வரப்பிரசாதம் என்று பெருமை பேசிக்கொண்டு, அதனை எதிர்ப்போர் படுநாசமாவர் என்று சபித்துக்கொண்டு கிடக்கும் ஓர் கும்பல் நாட்டிலே இருக்கிறது. இது நடத்தும் மமதை அரசுக்கு, அடிகளார், விருப்பத்தால் அல்ல, நிலையின் காரணமாக முரசு கொட்டுகிறார்! அவருடைய திருத்தொண்டுக்குத் தங்கத் தோடாபோட்டு மகிழ்விப்பது போல அவரைப் பாராட்டி 'அர்ச்சனை' செய்தனர், ஆலய அதிபர்கள்.

கடவுளை ஒழித்துக்கட்டவே ஒரு கூட்டம் எண்ணுவதுபோல, இட்டுக் கட்டிக்கொண்டு, ''ஆகாது அன்பர்காள்! ஆகாது! கூடாது, நண்பர்காள், கூடவே கூடாது! தாயை மறுக்கும் சேய், நாயன்றோ! தந்தையைமறுத்திடுபவன் மகனோ! மாபாவி அலனோ!''—என்று ஏசலைப் பேச்சாக்கிக்கொண்டு, எதிருள்ளோரின் சிரக்கம்பம் கண்டு மகிழ்ச்சி பெறலானார், குன்றக்குடிகளார்! சரியான 'ஜவான்' கிடைத்துவிட்டார் என்றெண்ணி 'ஜாம்பவான்கள்' அவரை அர்ச்சித்தனர்! ஆனால், பாபம், அவர் காணும் அனுபவம் என்ன, இன்று!

கைத்தலநிறைகனி அப்பமொடவல்பொரி கப்பிய கரிமுகன் அருளை, அவர், கன்னித் தமிழ் நாட்டிலேமட்டுமல்ல, கடல்கடந்து சென்றுள்ள தமிழர்க்கும் வழங்கினார். மண்கூடச்சுமந்தாராம், பிட்டும் கேளாமல்! அவர் போகாத கோயில் இல்லை, பேசாத நாளில்லை, கழகம் அமைக்கிறார், கற்றோர் ஏற்றும் போது அவர் தமக்குக் கனகாபிஷேகம் செய்கிறார், கலனானகோயில் கண்டால் கண்ணீர் உகுக்கிறார், கண்ணீரும் கம்பலையுமாக உள்ள சேரிவாழ் மக்களைக் கண்டால், திருநீறு தருகிறார், மாநாடுகள் நடத்துகிறார், வழிபாடுகள் ஏற்பாடு செய்கிறார், இடையிடையே, இடுக்கித் தாக்குதலும் நடாத்தி வருகிறார்—சீர்திருத்த இயக்கத்தின்மீது சீறுகிறாராம்.

சீர்திருத்த இயக்கத்தவரின்மீது சீறிப்பாய, பத்தாண்டுகட்கு ஒருமுறை கிளம்புவார், யாராவது ஒருவர்! அடிகளார்போன்ற பண்பறிந்தவர்கள்மட்டுமல்ல, மட்டரகங்களெல்லாம்கூடத்தான்! சந்தனப் பொட்டுச் சிந்தூரச் சாமியார் கிளம்புவார், சரிகைத் தலைப்பாகை சச்சிதானந்தம் புறப்படுவார், வேப்

(13-ம் பக்கம் பார்க்க)

திராவிடநாடு

காஞ்சி] 22—5—55 [ஞாயிறு

இரு முகம்!

—[]—

உலகிலேயே இல்லாத வழி.

புத்தம் புதிய வழி.

சித்தம் மகிழ்வுறச் செய்யும்.

இரத்தம் சிந்தவேண்டியதில்லை.

சமதர்ம மணம் வீசும்

சாத்விக வழி!

* * *

கடந்த மே முதல்நாளன்றுதான் டில்லிமா நகரிலே, இந்தப் புதிய வழிகளைப்பற்றி பூரிப்புடன் வெளியிட்டிருக்கிறார்.

இந்திய மண்ணில் உழைக்க ஒருவனும் உண்ண ஒருவனும் இருக்கிறான்!—என்பதை, ஏற்றுக்கொண்டிருக்கிறார். எனினும் வெளியிட்டிருக்கிறார்.

இந்த இரண்டு வர்க்கங்களும் புலியும் பசுவும்போலிருக்கிற உண்மையையும் மறுக்கவில்லை.

ஆனால், விடுபட வேண்டிய பசுவும், குருதி குடிக்கத் துடிக்கும் புலியும் ஒன்றுகூடி உட்கார்ந்து சமரசம் பேசி, புரட்சியைச் செய்ய வேண்டுமாம் — பொருளாதாரப் புரட்சியை! அப்படிச் செய்யும் வழிதான், இந்திய வழியாம். பிறநாடுகள், இந்த வழியைப்பற்றி எண்ணாமல், கிளர்ச்சி — புரட்சி — என்று ஈடுபட்டு, உயிரையும் இரத்தத்தையும் கொட்டினார்களாம், ரஷ்யாவில்.

ஊர்வலமாகப் போகவேண்டும்—சர்க்காரின் படைகள் வரவேண்டும்—தங்களைத் துப்பாக்கியால் சுட்டுப் பொசுக்கவேண்டும்—தாங்கள் மடிய வேண்டும்—தங்கள் மனைவி மக்கள் அனாதைகளாகி வீதியிலே நிற்க வேண்டும் என்பதற்காகக் கிளர்ச்சிகள் செய்வதில்லை பாட்டாளிகள்.

வாழும் வசதிகளை விரும்பி, செய்கிறார்கள், கிளர்ச்சி! குண்டுகளைச் செய்துகொண்டுபோய் முதலாளி வீட்டில் போட்டோ, 'மானேஜரைப் பிடித்து இழுத்து கால்வேறு கைவேறாக வெட்டுவோம் வாரீர்!' என்று தீர்மானம் நிறைவேற்றிக்கொண்டோ, அல்ல, அவர்கள் கிளர்ச்சி செய்வதும். உரிமைகளை கோரிப்பெற உலகம் அங்கீகரித்திருக்கும் ஒரே ஒரு வழியில்தான் செல்லுகிறார்கள்—அதுதான், கோரிக்கைகளைப் பெற வேலைநிறுத்தம் செய்வது என்கிற வழி. உலகமெங்கும் உள்ள பாட்டாளிகள், பயன்படுத்திக் கொண்டுவரும், வழி!

முதலாளிகள் தங்களை வேலையிலிருந்து நீக்கும்போதும், வேலை செய்யும் நேரத்தை அதிகமாக்கும் போதும், கூலியைக் குறைக்கும் போதும், முதலாளிகளை எதிர்த்துக் குமுறல்கள் கிளம்புகிறது, தொழிலாளர்களிடம். இப்படிக் குமுறல்கள் வெடிக்கும்போதெல்லாம், அரசு தலையிட்டு, முதலாளிகளையும் தொழிலாளர்களையும் கூட்டிவைத்து ஒரு சமரச நிலையை உண்டுபண்ண வேண்டும். ஜனநாயகத்தில், அரசின் கடமைகளில், இதுவும் ஒன்று! அரசு தலையிட்டு நீதி வழங்கும் என்பதால்தான், தொழிலாளர்களும் கோரிக்கைகளைத் தெரிவிக்க வேலைநிறுத்தம் செய்கிறார்கள். அப்படி வேலைநிறுத்தங்கள் கிளம்பும்போது முதலாளிகள் உடனே ஓடுகிறார்கள், அரசிடம்! சமரசம் செய்ய வேண்டிய சர்க்கார் உடனே, தொழிலாளர் தலைவர்களைப் பிடித்து—முதலாளிகள் அல்ல!—சிறையிலடைக்கும், பிறகு தடியடி நடக்கும், துப்பாக்கிக் குண்டுகளும் வெடிக்கும். ஏழாண்டுகளாக நடைபெற்று வரும் காட்சி இது!! — இந்த நிலையில் மேதின விழாவில், இந்தியன் வழியை விளக்குகிறார், தொழிலாளர்களும் முதலாளிகளும் கூடிப் பேசிக் குறைகளைக் களையவேண்டுமென்று. அந்த யோசனையைச் சொன்னவர், பண்டித நேரு! ஆம், இந்தியாவை ஆளும் முதலமைச்சர். அவர்தான், இந்த நூதன வழியைப்பற்றிப் பிரமாதமாக வெளியிடுகிறார், மேதின விழாவில்.

கான்பூரில் 46000 தொழிலாளர்கள்' வேலைநிறுத்தம் செய்து வருகிறார்களாம்.

அமிருதசரசில் **600** தொழிலாளர்கள்,; செய்கின்றனர், கிளர்ச்சி.

பம்பாய் அந்தேரியில் கல்லுடைக்கும் தொழிலாளர்கள் கூலி உயர்வு கோரிக் கிளர்ச்சியிலீடுபட்டிருக்கிறார்களாம்.

கான்பூரில் இதுவரை **200** தொழிலாளர்களையும், தொழிற்சங்கத் தலைவர்களையும் பிடித்துச் சிறையில் வைத்திருக்கிறது.

அமிருதசரசில் **50** தொழிலாளர்கள், 'ஜெயிலுக்குள்' அனுப்பப்பட்டிருக்கிறார்கள்.

பம்பாய் அந்தேரியில், துப்பாக்கியே முழங்கியிருக்கிறது! பலருக்குக்காயமாம்.

மேடையில், சமரசபோதனை புரிகிறார், நேரு! நாட்டில் நடைபெறுகின்றன இந்தக் காட்சிகள்!

கூடிப்பேசுதலே சிறந்த வழி என்றார், மேடையில்! கொடிதூக்கினாலே சிறைவாசம் என்கிறது சர்க்கார், வெளியில்!

பாட்டாளி வர்க்கம், தன்னுடைய குறைகளை நிவர்த்தித்துக் கொள்ளவேண்டியதுதான், என்கிறார் மேதினவிழாவில்—குறைகள் சொல்லுவோருக்கு' குண்டுமாரி கிடைக்கிறது, நாட்டில்!

உலகிலேயே இல்லாத வழியென்று உரத்துப் பேசுகிறார்கள்—மேடையில். அந்த வழியினைச் செய்ய முயலாமல், அடித்துத் துவைக்கிறது, அவருடைய சர்க்கார்.

அவர் கூறும் முதலாளிவர்க்கம், அலுங்காமல்தான் பவனி வருகிறது, ஆங்காங்கு! ஆனால் கோரிக்கைகளைச் சொல்லும் தொழிலாளர்கள் இல்லத்திலே—குமுறல்! புயல்!!

இரத்தம் சிந்தாமலே, சமதர்ம மணம் எழவேண்டும் என்கிறார்—மக்களைப்பார்த்து. இரத்தம், சிந்தப்படுகிறது, பம்பாயில்! சர்க்காரின் துப்பாக்கிக் குண்டுகளால்!

சாத்வீக வழிநாடுக—என்கிறார், தொழிலாளர்களைப் பார்த்து.

ஆத்திரத்தோடு அடித்து அடைக்கப்படுகின்றனர், அரசாங்கத்தால், தொழிலாளர்கள்.

மேடையில் ஒரு முகம்! அரசபீடத்தில் இன்னொரு முகம்!—இதுதான், நேருவின், 'மாதிரி சோஷியலிச' உருவம்.

அதனால்தான், இந்த 'மாதிரி சோஷியலிசம்'—நன்மைகளை மலர்விக்காது என்று, நாடு கருதுகிறது. நாமும் சொல்லுகிறோம்.

★

அரசாண்ட ஆண்டி

வெளிநாட்டு நடவடிக்கை ஒன்றின்போது, போப் விரும்பாத காரியத்தை ரிஷ்லு துணிந்து செய்தார். அவருடைய செல்வாக்கு நிரம்பிய இடத்தைப் படை கொண்டு தாக்கி, அவர் வசமிருந்த இடத்தை விடுவித்தார்! அந்தப்படையும், பிரன்ச்சு நாட்டுடையதுஅல்ல, பிராடெஸ்ட்டென்டுக்காரருடையது! அந்தப் படையை ஏவியதுடன், அதற்குப் பண உதவிசெய்து, போர் மூட்டி வெற்றியும் கண்டார்—போப் வெகுண்டார், நமது ஆசியைக் கோரி நின்றவன் செயலா இது என்று பதைத்தார், கார்டினல் ரிஷ்லுவா இப்படிக் கத்தோலிக்க உலகத்தின் தலைவரைத் துச்சமாக எண்ணி எதிர்ப்பது என்று கேட்டார். ரிஷ்லு, கார்டினல் என்ற முறையில் போப்பாண்டவருக்கு அடக்கம், ஆனால், முதலமைச்சர் என்ற நிலையில் போப்பாண்டவர் குறுக்கிட்டாலும், அரசுக்காக, பிரான்சுக்காக, கடமையைச் செய்தாகவேண்டும், என்று பதிலளித்தார் ரிஷ்லு.

கத்தோலிக்கர்களைக் கசப்படையச் செய்ததால், பிராடெஸ்ட்டென்டுகளிடம் கண்ணியமாக நடந்து கொண்டார்போலும் என்று எண்ணிடத் தோன்றும். அப்படி ஒன்றுமில்லை. அவர்கள் பட்டபாடு கொஞ்சமல்ல.

ஹ்யூஜிநாட் என்றழைக்கப்படும், பிராடெஸ்ட்டென்ட் மக்கள், பிரான்சில் ஒரு பகுதியில், மிக்க செல்வாக்குடன் வாழ்ந்துவந்தனர். அரசுக்குள் அரசுபோல், அவர்கள் தனிக் கோட்டைகள், தனிப் படைகள், தனி நகர ஆட்சிகள் அமைத்துக்கொண்டு வாழ்ந்தனர். ஒப்புக்கு, பிரான்சு மன்னனுடைய ஆட்சிக்கு உட்பட்டிருந்தனர்.

இந்த நிலைமையை ரிஷ்லு எதிர்த்தார். பிராடெஸ்ட்டென்டுகளின் கோட்டை ஊரான லாரோகேல் என்னும் இடத்தை முற்றுகையிட்டுத் தாக்கி, சின்னபின்னமாக்கினார். அந்தப் போரின் போது கார்டினல் ரிஷ்லு இரத்த வெறி கொண்டலையும் ராணுவத் தலைவனைக் காட்சிதந்தது கண்டு, இவரா, அறநூற்களைப் படித்தவர், ஐயன் அடியாராக இருந்தவர், என்று எவரும் கேட்டிருப்பர்.

லாரோகேல் கோட்டை முற்றுகையின்போது, ஆங்கில அரசு பிராடெஸ்ட்டென்டுகளுக்குத் துணை புரிவதாக வாக்களித்தது — ஓரளவு உதவிபுரிந்தது— உதவிக்கு வந்த கப்பற்படையை ரிஷ்லு முறியடித்து, லாரோகேல் கோட்டையை வளைத்துக்கொண்டான். சொல்லொணாக் கஷ்டப்பட்டனர் பிராடெஸ்ட்டென்டுகள். பட்டினி ரிஷ்லுவின் படையைவிடக் கொடுமைவிளைவித்தது. புல் பூண்டுகளும் கிடைக்கவில்லை, செருப்புத்தோலைக்கூட வேகவைத்துத் தின்றார்களாம்—அந்த வீரமக்கள் எலும்புந்தோலுமாயினர்-நோய் சூறையாடிற்று - முதியவர்கள் மாண்டனர், குழந்தைகள் இறந்தன, கொடுமையின் அளவு சொல்லுந்தரத்ததன்று. பணிவதன்றி வேறு வழி இல்லை, பணிந்தனர்-ரிஷ்லு, வெற்றிப்பவனி நடத்தினான் வீழ்ந்து பட்ட மக்களின் கோட்டை ஊரில்! கோட்டை இடித்துத் தள்ளப்பட்டது, கொடி மரங்கள் வெட்டி வீழ்த்தப்பட்டன, உரிமை பறிக்கப்பட்டது—மார்க்கம் எப்படியோ இருக்கட்டும், தொழுகை உமது இஷ்டம்போல் செய்துகொள்ளுங்கள். ஆனால், படை, கொடி, கோட்டை என்று கனவிலும் எண்ணாதீர் என்று உத்தரவிட்டான் ரிஷ்லு. லாரோகேல் கோட்டையைப் பிடிக்க நடத்தப்பட்ட போரின்போது, ரிஷ்லுவின் இதயம், எவ்வளவு கொடுமைகளையும் துணிவுடன் கக்கக் கூடியது என்பது வெளிப்பட்டது.

கத்தோலிக்கரைக் கைகழுவிவிட்டபோதும் சரி, பிராடெஸ்ட்டென்டுகளைப் பதறப்பதற அடித்தழித்தபோதும் சரி, ரிஷ்லுவின் எண்ணம், மார்க்கக் கொள்கையின் பாற்பட்டதல்ல, ஆதிக்கம் ஒன்றுதான் குறிக்கோள். ரிஷ்லுவின் மொழியில் கூறுவதானால், எல்லா நடவடிக்கையும் அரசுக்காக! பிரான்சுக்காக!!

பொன் வேலைப்பாடுள்ள மங்கல் நிற உடை, மார்பிலே நீல நிறக் கவசம், தலையிலே தொப்பி, தொப்பியில் பறவை இறகு, அலங்காரத்துக்கு; இடையே உடைவாள், கையிலே பிரம்பு—இது ரிஷ்லு, லாரோகேல் கோட்டைப் போரின்போது. கார்டினல் உடை, களத்துக்கு ஆகாது என்று களைந்துவிட்டு, போர் வீரர்கள் மத்தியில், போர் வீரன் போலவே உலவினான். கார்டினல், கர்த்தரிடம் ஜெபம் செய்து அருள் பெற்று வெற்றியை நாடவில்லை— அது நடவாது என்பது ரிஷ்லுவுக்குத் தெரியும். களம் சென்று, இப்படித் தாக்குக, இப்புறம் பாய்க! என்று ராணுவ முறை கூறிவந்தான். வாலிபவயதில் ராணுவக் கல்லூரியில் கற்ற பாடங்களைப் பயன்படுத்த ஒரு வாய்ப்புக் கிடைத்தது.

லாரோகேல் போரிலே பெருமிதமான வெற்றி கிடைத்ததற்குக் காரணம், ரிஷ்லுவின் திட்டம் மட்டுமல்ல, பிரன்சுப் படையினர் காட்டிய வீரமும் ஒரு முக்கிய காரணம்; அந்த வீராவேசத்துக்குக் காரணம், மன்னன் ஊட்டிய உற்சாகம். மன்னனுக்கு இந்தப் போரிலே உற்சாகம் அதிகமாகஇருந்ததற்குக்காரணம், லாரோகேல் கோட்டையினருக்குத் துணைபுரிய வந்த ஆங்கிலக் கப்பற்படைக்குத் தலைமை தாங்கி, பக்கிங்காம் பிரபு வந்தது! அதற்குக் காரணம், ஒரு அரண்மனைச் சம்பவம்!

ஒயில்மிக்கவன், பக்கிங்காம் பிரபு! ஆங்கிலநாட்டுச் சீமான், அரசனுடைய ஆதரவு நிரம்பப் பெற்றவன். அழகு கண்டால், ரசிகனாகிவிடுவான் — ரசிகனானதும், ரசாபாசம் நேரிடும்! களியாட்டத்தில் விருப்பமுடையவன்.

கண்டதும் காதல் கொள்பவன் மட்டுமல்ல, எந்தக் கட்டழகியும், தன் கண் தொட்டால் பணிந்துவிடுவாள் என்பதிலே அசைக்கமுடியாத நம்பிக்கை கொண்டவன். அலங்காரமான உடை, ஆளை மயக்கும் பேச்சு, அளவற்ற துணிச்சல்.

லூயி மன்னனுடைய உடன் பிறந்தாள், ஹெனிரிட்டா, இங்கிலாந்து மன்னன்சார்லசுக்கு மனைவியானாள்.

ஹெனிரிட்டாவை, இங்கிலாந்து அழைத்துச் செல்லும் உயர்தனிக் கௌரவம், பக்கிங்காம் பிரபுவுக்குத் தரப்பட்டிருந்தது. பாரிஸ் வந்தான், அரண்மனையில் தங்கினான், மாடப்புருவைக் கண்டான், மையல் கொண்டான். நிராகரிக்கப்பட்ட அழகி, நிம்மதியற்ற நங்கை, ஆன், அவன் கண்ணில் தட்டுப்பட்டுவிட்டாள்! போதாதா!! மன்னனோ அவளிடம் முகங்கொடுத்துப் பேசுவதில்லை, மங்கையோ, வாடா மல்லிகை என மணம் வீச இருக்கிறாள். ஆரத்தழுவும் உரிமை கொண்டோன் அலட்சியப் படுத்திவிட்டான், ஆரணங்கு, படரும் கொழுகொம்பற்ற கொடியெனத் துவள்கிறாள். கண்களிலே ஏக்கம் இருப்பதும், கவர்ச்சியை அதிகப்படுத்துவதாகவே இருக்கிறது. பக்கிங்காம், தீர்மானித்துவிட்டான், ஆன் அரசியை இன்பபுரி அழைத்துச் செல்வது என்று.

பச்சை மயில் பாங்குடன் உலவுகிறது—பார்த்து ரசிக்கும் நிலையிலும் மன்னன் இல்லை! வலைவீசத்துணிந்து விட்டான், பக்கிங்காம்.

தனியே ஒரு நாள், ஆன், அரண்மனைத் தோட்டத்திலே உலவிக்கொண்டிருந்தாள்—உல்லாச புருஷன் அங்கு சென்றான்—காதலைப் பொழிந்தான் பார்வையால், திடுக்கிட்ட மங்கையை நெருங்கினான், கரம்பற்றினான், இன்ப அணைப்பு, அவளுக்கு இதயத் துடிப்பு, எதிர்பாராச் சம்பவம், எனவே இளமங்கை, அலறிவிட்டாள்—தன்னை விடுவித்துக் கொண்டபடி. ஆன் அலறிய குரல் கேட்டு அணங்குகள் ஓடிவந்தனர்.

''அரசியாரே! அலறினீர்களா''

''யார்? நானா! அலறினேனா!''

''குரல் கேட்டதே!''

''ஆமாம்—செல்வோம்''

எப்படிச் சொல்வாள் நடந்ததை — சாகசக் கள்ளன், சமயம் சரியில்லை, பழம் நழுவிவிட்டது, என்று எண்ணிச் சென்றான்.



நாட்டுக்கு அரசி நாயகன் இளைஞன்! அரண்மனைத் தோட்டம்! அயல்நாட்டான், அணைக்க வருகிறான்! —என்ன அக்கரமம் —எவ்வளவு துணிவு! என்கதி இதுதானா!— என்று ஆன் எண்ணாமலிருக்க முடியுமா. தனி அறைசென்றாள் — மன அதிர்ச்சி குறையுமா! பயம்— பயத்தின் ஊடே கோபம்—இந்த இரு உணர்ச்சிகள் மட்டுந்தானா, இவைகளை விரட்டிய வண்ணம், ஆவல்!

எவ்வளவு துணிவு! என்ன அக்ரமம்.......என்று குமுறிய நெஞ்சம், மெள்ள மெள்ள, எவ்வளவு ஆவல்! என்ன காதல்!! என்று எண்ணலாயிற்று.

தலைபோகும் காரியமாயிற்றே, என்பது தெரியாதா— தகாத காரியம் என்பதும் தெரியாதா—தெரிந்தும், ஏன், அவன் என்னைக் கரம்பிடித்திழுத்தான்! அவ்வளவு காதல்!! துணிந்து செய்தான்! அணைத்துக் கொண்டானே, என்னை—நான் விடுவித்துக் கொள்ளாதிருந்தால்?......... செச்சே! கெட்டவன், போக்கிரி, எதுவும் செய்வான் அவன். ஆமாம்! காதலால் தாக்கப்பட்டவர்களுக்குத்தான் கண் தெரியாதாமே!...அவன் அணைத்துக்கொண்ட போது என் உள்ளம் எவ்வளவு பதறிற்று—உடல் மட்டும் ஏனோ பதறவில்லை—ஏனோவா?—அவன்தான் ஆரத் தழுவிக்கொண்டானே! ஆன் அரசியின் உள்ளம் எதைத் தாள் தள்ளும். கண்ணைத் திறந்தபடி இருந்தாலும் மூடினாலும், தனி அறையில் இருந்தாலும், சேடியருடன் இருந்தாலும், இசை கேட்டுப் பொழுது போக்கினாலும், வானத்தைக் கண்டு மகிழ முயற்சித்தாலும், அவனல்லவா வந்துவிடுகிறான்! ஆரத் தழுவுகிறான்!! ஆருயிரே! என்கிறான். இதுநாள்வரை கேட்டறியாத கீதம் உணர்ந்தறியாத இன்பம்! பொல்லாதவன், நல்ல உள்ளத்தைக் கெடுத்தேவிடுவான் போலிருக்கிறதே— எங்கே அவன் இப்போது—என்ன செய்கிறான்—மறுத்தேன் என்பதால் மருண்டோடி விட்டானா—அதே மலர்த் தோட்டத்திலே உலவுகிறானா—நான் வருவேன் என்றா— பேதை உள்ளம் என்னவெல்லாமோ எண்ணிற்று. அவன் வென்று விட்டான்—அவள் பணிந்துவிட்டாள். உள்ளம் பணிந்துவிட்டது. உடனிருந்த தோழி, அவள் உள்ள மறிந்து, பக்குவமாகப் பாகுமொழி பேசினாள். பிரபு அழைக்கப்பட்டான்—மஞ்சத்துக்கு! கொஞ்சு மொழி பேசினான்! அவள் மஞ்சத்தில் சாய்ந்து கொண்டிருக்கிறாள் —அவன் கீழே முழங்காற்படி யிட்டபடி, மயக்க மொழி பேசுகிறான்! அவன் இருக்கும் இடத்தில், நிலையில் மன்னன் மட்டும் இருந்தால்! மன்னனா! அவனா என் மணாளன்? ரிஷ்லுவின் அடிமைக்கு ஒரு மங்கையின் உள்ளத்துக்கு இன்ப மூட்டும் பண்புமா இருக்கும். என்னைப் பட்டினி போட அல்லவா, இந்த அரண்மனையில் சிறைவைத்தான்—இதோ வந்திருக்கிறான் வீரன், விடுதலை கிடைக்கும், விருந்து கிடைக்கும், வாழ்வு கிடைக்கும்! ஆன் எண்ணாத எண்ணமில்லை.

விருந்து கிடைத்தது பிரபுவுக்கு! என்கிறார்கள்— இல்லை என்றும் கூறுகிறார்கள். பக்கிங்காம்-ஆன் காதலாட்டம்பற்றிய பேச்சு, அரண்மனையில் மட்டுமல்ல, மாளிகைகளிலே, கடை வீதிகளிலே, பிரான்சிலே மட்டுமல்ல, இங்கிலாந்திலே, உல்லாச உலகெங்கும் கிளம்பிற்று.

அந்தப் பக்கிங்காம், நூறு கப்பல்களுக்குத் தலைவனாகவருகிறான், லாரோகேல் கோட்டையினருக்குத்துணை புரிய! பிரன்சு மன்னன், அவனுடைய முயற்சியை முறியடிக்க வேண்டுமென்பதிலே அளவற்ற ஆர்வம்கொண்டதிலே ஆச்சரியம் என்ன!

பக்கிங்காம், காதலில் பெற்றிருந்த திறமையின் அளவுக்குப் போரிலே பெற்றிருந்து, லாரோகேல் கோட்டைப் போரில், பிரன்சு மன்னனை முறியடித்திருந்தால்? ஏதேதோ நடைபெற்றிருக்கும். அலங்காரக் கப்பலொன்றிலே, அணங்குகள் ஆடிப் பாட, மகிழ்வோடு அவர் நடுவே ஆன் வீற்றிருக்க, பக்கிங்காம் காதல் பொழியும் கண்களுடன் அவளைக் கண்டவண்ணம், இங்கிலாந்துக்

குப் பயணமே செய்திருக்கக்கூடும். அந்நாள், அரச குடும்பங்களிலும், பிரபு குடும்பங்களிலும், இத்தகைய சுவைக்கு அளவும், வகையுமா இருந்தது! கணக்கில்லை!!

பிராடஸ்டென்டுகளை எதிர்த்து நடத்தப்படும் போர் இது; புனிதப்போர்!—என்று பேசி, கத்தோலிக்கர் மனதில் கனலை மூட்டிவிட முடிந்தது ரிஷ்லுவால்! கத்தோலிக்க ருக்கு நீ செய்த நன்மை என்ன? காட்டிய சலுகை யாது? என்று யாரும் கேட்கவில்லை. அவர்கள் பிராடஸ்டெண்டு களை அழித்திடப் போரிடுவது ஐயன் அருளுக்குப் பாத்திர மாகும்வழி என்றுகருதினர்; சீறிட்டுப்போரிடக்கிளம்பினர்; மடாலயங்கள் போர்ச் செலவுக்குப் பொருளை அள்ளிக் கொடுத்தன; இந்தப் புனிதப் போரிலே ஈடுபடுவோரின் பாவங்கள் துடைக்கப்பட்டுவிடும் என்று போப்பாண்டவ ரின் ஸ்ரீமுகம் பிறந்தது: ரிஷ்லு, களிப்புடன் களம் புகுந்து காரியத்தைக் கவனிக்கலானர், போர்வீரன் உடையில்!

கத்தோலிக்க மார்க்கப் போதகர், பிராடெஸ்டெண்டு தத்துவத்தைக் கண்டதுண்டமாக்கியவர், ரிஷ்லு, இவர் தொடுக்கும் இந்தப் புனிதப் போர், முதல் கட்டம். இதிலே கிடைக்கும் வெற்றி, வேறு பல வெற்றிகளுக்கு வழி செய் யும், ஐரோப்பாவில், பிராடெஸ்டெண்டுபூண்டே இல்லாது ஒழித்துக் கட்டப் போகிருர் என்று கத்தோலிக்கர் எண் ணிக்கொண்டனர்; ரிஷ்லு இதைக் கண்டு மகிழ்ச்சிகொண் டார்; மந்தமதியினர் அவருடைய உண்மையான நோக் கத்தைக் கண்டுகொள்ளவில்லை; கத்தோலிக்க மார்க்க ரட்சகர், என்று அவர்கள் ரிஷ்லுவைக் கொண்டாடினர்: அவருடைய நோக்கம், கத்தோலிக்கரின் செல்வாக்கை வளர்த்திட பிராடெஸ்டென்டுகளை ஒழித்திடவேண்டும் என்பதல்ல, ஆட்சியைத் தான் முன்னின்று நடத்திச் செல்லும்போது, பிரான்சிலே ஒரு பகுதியினர், அடங்க மறுப்பதா! என்ன துணிவு! இவர்களை ஒழித்துக்கட்டா விட்டால், நம் மதிப்பு என்ன ஆவது!—இது ரிஷலுவின் எண்ணம்.

பதினைந்து திங்கள் முற்றுகை! உள்ளே ஒரு பொருளும் போக முடியாது! பட்டினி போட்டுச் சாகடிக்கும் முறையிலே, போர் இருந்தது! சித்திரவதைக்கு ஆளாக் கப் பட்டனர்! தன்மானம், நிமிர்ந்து நிற்கச் சொல்கிறது, பசியோ, பணிந்துவிடு! என்று தூண்டுகிறது! உள்ளே இப்படி அடைபட்டுச் சாவதைவிட, போரிலே, தாக்கி, தாக்குண்டு இறந்துபடுவது எவ்வளவோ மேலாக இருக் குமே என்று எண்ணினர் அந்த மக்கள். பழைய செருப்புத் தோலைக்கூட வேகவைத்துத் தின்றனராம், எலும்புந் தோலுமாகிப் போன நிலையில்! இந்த அவதி பற்றி, லூகான் ஆலய அதிகாரியாக இருந்த ரிஷ்லுவுக்குத் துளி யேனும் இரக்கம் ஏற்பட்டதாகத் தெரியவில்லை! உள்ளே அல்லல் அதிகமாகிவிட்டது, அவதிப்படுகிருர்கள் என்று 'சேதி' கிடைத்ததும், அவருடைய உள்ளம், சரி! பயல்க கள் இன்னும் சில நாட்களில் பணிந்துவிடுவார்கள்! நாம் மேலும் ஓர் வெற்றி பெறுவோம், நமது புகழொளி பரவும் என்று எண்ணி மகிழ்ந்தது.

ஆஸ்திரிய அரச குடும்பத்தின் செல்வாக்கைக் குலைக் கும் திட்டம் ரிஷ்லுவுக்கு உண்டு. இதற்காகச் சமர் நடத்தி னன், வெற்றி கிடைத்தது. சவாய் பரம்பரைக்கும், ரிஷ்லு வின் போக்கினுல் கஷ்டம், நஷ்டம். இவைகளின் பயனுக பிரன்ச்சு மக்களுக்கு ஏதேனும் நலன் கிடைத்தா என்றல், இல்லை; ரிஷ்லுவின் கண்களுக்கு மக்கள் தெரியவு மில்லை.

ரிஷ்லுவின் நிலை உயர உயர, பகையும் வளரத்தான் செய்தது—ஒவ்வொரு பகையையும் பயங்கரமான முறை யிலே முறியடித்துவந்தான். ஒற்றர்கள், அவனுக்குக் கண்கள், காதுகள்! எந்த நேரத்திலும் ஆபத்து நேரிட லாம் என்ற அச்சம்; எனவே ரிஷலு, ஆயுதம் தரித்த காவலாட்களின்றி வெளியே செல்வதில்லை. எந்த மாளிகையிலே பேசப்படும் விஷயமும், ரிஷ்லுவுக்கு எட்டி விடும், எனவே, முன்னேற்பாடுகள் செய்வது எளிதாக வும் வெற்றிகரமாகவும் முடிந்தது. இவைகளுக்காகப் பெரும் செலவு—அரசாங்கப் பணத்திலிருந்து. அரசுக் காக! பிரான்சுக்காக! என்ற மந்திரச் சொல்லைக் கூறிய படி, மட்டற்ற கொடுமைகளைச் செய்துவந்த ரிஷ்லு, அர சனையும் மிஞ்சக்கூடிய செல்வம் சேகரித்துக்கொண்டான். ஏழைக் கோயிலுக்குப் பூஜாரியாக இருந்துவந்த ரிஷ்லு விடம் ஏராளமான செல்வம், இணையற்ற மாளிகை, ஆடம் பரமான வண்டி வாகனங்கள், காலாட்படை, குதிரைப் படை! பாடகர்கள்! பணியாட்கள்! உறவினர்களுக்கு உயர் பதவி தரக் கூசவில்லை. ஊரார் பார்த்து, இவ்வளவு செல் வம் எப்படிக் கிடைத்தது என்று கேட்பார்களே என்று எண்ணவுமில்லை. பொன் அவன் காலடியிலே வந்து வீழ்ந்தது! நாடோ, ஏழ்மைப் படுகுழியிலேயே இருந்தது.

மன்னன் சிரித்தால்; உடன் சிரிக்கவேண்டும், சோக மாக இருந்தால் சோகமடையவேண்டும், பேசுவதைக் கேட்டுக்கொள்ளவேண்டும், ஆர்வம் அதிகம் இருப்ப தாகக் காட்டிக்கொள்ள வேண்டும்—இவ்வளவுதான் மன்னன் தன்னுடன் பழகிய பாவையரிடம் விரும் பியது.

பாரிஸ் நகரிலேயே நிகரற்ற அழகி என்று புகழப் பட்ட ஹாடிபோர்ட் என்பாளிடமானுலும், அவளிடம் மனத் தாங்கல் கொண்டபோது கிடைத்த பாயேடி என்பவளானு லும், எந்த மங்கையிடமும், மன்னன் பழகியது இந்த முறையிலேதான். ரிஷ்லுவுக்கு இதிலே மிகுந்த திருப்தி. கெண்டை விழி மாதரிடம் மன்னன் மற்றவர்கள் போலப் பழகிவிட்டால், ஆபத்தல்லவா!

இந்த ஹாடிபோர்ட், பாயேடி, எனும் இருவருமே, ரிஷ்லுவின் போக்கை உணர்ந்தனர்—வெறுத்தனர். கண வனுக்கும் மனைவிக்கும் இடையே, ரிஷ்லுதான் வெறுப்பை மூட்டிவிட்டான் என்று கண்டித்தனர். தங்களிடம் பழகு வதால், தாங்களே மன்னனிடம் மெள்ள மெள்ள உண் மையைச் சொல்லலாம், ஆன் நல்ல நிலைமைக்கு வர உதவிபுரியலாம் என்று முயன்றனர், முடியவில்லை.

ஹாடிபோர்ட், ஆன் சார்பாக மன்னனிடம் பேசத் தொடங்கியதும், மன்னன் கோபங்கொண்டு, அவளை விட்டு விலகினுன். பிறகு, ஜோசப் பாதிரியின் உறவின ளான, அந்த மங்கை, ரிஷ்லுவுக்கு விரோதமாக மன்ன னைத் திருப்ப முயற்சித்தாள். பலிக்கவில்லை. அந்த மங்கையைக்கொண்டு மன்னனைத் தங்கள் வலைக்குள் போடலாம் என்று சிலர் முயன்றபோது, அவள் அதற்கும் இடம் தாராமல், கன்னி மாடம் சேர்ந்துவிட்டாள். அவள் கன்னி மாடம் சேர்ந்தபிறகு கூட, மன்னன் அங்கு சென்று, மணிக்கணக்காக அவளிடம் பேசிக்கொண்டிருப் பானும். அப்போதும் அந்தப்பாவை, ரிஷ்லுவின் பிடியி லிருந்து மன்னன் விடுபடவேண்டும் என்பதையே வலி யுறுத்தி வந்தாளாம்—இதனுல் வெறுப்படைந்த மன்னன், கன்னிமாடம் செல்வதையே நிறுத்திக்கொண்டானும். ரிஷ்லுவுக்கு எதிராக எவரேனும் ஏதேனும் சொன்னுலும், கேட்பதற்கு மன்னன் விரும்புவதில்லை. அவ்வளவு பற்று ஏற்பட்டுவிட்டது. ரிஷ்லுவுக்கு இந்தத் துணை இருக்கு மட்டும் மற்றவர்களைப் பற்றிக் கவலை என்ன! மேரி அம்மையை அறவே புறக்கணித்தான்—அம்மையின் மனதிலேயோ, பகை முழுவடிவெடுத்தது. சமயம் வரவில்லை.

(தொடரும்)

பிச்சாண்டி பிரச்னை!

"ஐயா! இரண்டு கண்ணும் தெரியாத குருடு ஐயா!!"

"சாமீ! சாப்பிட்டு இரண்டு நாளாச்சு!"

"காலணா இருந்தாப் போடுங்களேன்!"

*

"இந்த விஷயத்திலே ஹிட்லர் செஞ்சதுதாங்க, சரி! பிச்சைக்காரர்களையெல்லாம், சுட்டுத் தள்ளிட்டானாம்......"

"ஆமாம், சார்! சுட்டுத் தள்ளிடலாம். உயிரோடயிருந்து, மற்றவங்க உயிரை வாங்கும் இந்த ஜென்மங்கள் இருக்கிறதைவிட தொலையறது ரொம்ப நல்லது."

"அதுமட்டுமில்லே சார்! இப்படி பிச்சைக்காரங்க இருப்பது, நமது நமது தேசத்தோட கியாதிக்கு எவ்வளவு கெடுதல் தெரியுமோ—வெளிநாட்டிலிருந்து வர்றவங்க, இந்தப் பிச்சைக்காரப் பசங்களைப் போட்டோ எடுத்துக் கொண்டு போய், நம்ம நாட்டுக்கு அவமானம் உண்டாக்குகிறார்களாம்"

"ஆமாம்! ஆமாம்!! நான் கூடப் படித்தேன் பத்திரிகையிலே!"

*

"பிச்சைக்காரர்கள் தொல்லையை ஒழிப்பதற்காகவே, சர்க்கார் ஒரு விடுதியைத் திறந்திருக்கிறது. சென்னை நகரில் தென்படும், இயலாத பிச்சைக்காரர்களையெல்லாம் இங்கு கொண்டுபோய்ச் சேர்க்கப்படும். அவர்களுக்கு வேண்டிய உணவு, உடை முதலியவைகள் கொடுத்துக் காப்பாற்றப்படும்"

* * *

நாட்டின் நாலுமூலைகளிலும்அலையும் பிச்சைக்காரர்களைப் பற்றிப் பலர் பேசுவதையும், அவர்களது பேச்சுக்கெல்லாம் 'பூட்டு' போடுவதுபோல், சர்க்காரே ஒரு பிச்சைக்கார விடுதி உண்டாக்கி நடத்துவதையும், மக்கள் அறிவார்கள். பிச்சைக்கார விடுதி, நாடெங்கும் அல்ல! சென்னையில் ஓரிடத்தில்!! அதன் இலட்சியமும் சேவையும் பற்றிச் சிறப்பாகப் பேசுவோரு முண்டு. வீதியில் நின்றபடி விசாரக்குரல் எழுப்புவோரில், சிலருக்காவது, இந்த 'ராஜபோகம்' கிடைப்பது குறித்து, அதிருப்தி அடையவில்லை நாம்! ஆனால், இப்படிப்பட்ட 'அன்னதான சத்திரங்'கள்மூலம், இந்தச்சமுதாயநோயைத் தீர்த்துவிட முடியுமா?—ஒருக்காலும் முடியாது என்பதே நம் கருத்து! வாழப்பிறந்த மனிதர்களில் சிலர் ஏன் ஓட்டாண்டிகளாகவும், பிச்சாண்டிகளாகவும் ஆகிறார்கள் என்கிற அடிப்படையைப் பற்றி ஆராயும் வரையில், இந்தப் பிரச்னையைத் தீர்த்துக்கட்ட முடியாது.

பிச்சைக்காரர்கள், பலரகம்! வயோதிக நிலையினன்—உழைக்கவே முடியாத சக்தியற்றவன்—அங்கஹீனன்—கூனன்—குருடன்—இவர்கள், சமூகத்தின் அனுதாபத்துக்கும் பாதுகாப்புக்கும் உரியவர்கள் தாம்.

ஆனால், நல்ல உடற்கட்டுஉண்டு—உழைக்க முடியும் அவனால்—எனினும் சட்டி ஏந்திய வண்ணம், 'சண்முகா! குகா!!' என்று பாடிக் கொண்டு வருகிறான், பவனி.

"டேய்! தடிமாடாட்டம் இருக்கியே. உனக்கென்ன கேடு. எங்காவது போய், வேலை செஞ்சு உடம்பைக் காப்பாத்திக்கக் கூடாதா?"

"எங்கேசாமி, வேலை, அகப்படுது?"

வேலை கிடைப்பதில்லை, அவனுக்கு! அதனால், வேறு வழி இல்லாமல், 'இதுவே சுகமான தொழில்' என்று கிளம்பிவிடுகிறான்!! இவ்விதம் இங்கேபிச்சைக்காரர் அலைவது போல், ஒரு சமயம் இங்கிலாந்தின் வீதிகளிலெல்லாம், கும்பல் கும்பலாகப் பிச்சைக்காரர்கள் தெரியலாயினர்! அரசே, கண்டு அஞ்சவேண்டிய விதத்தில் ஆயிற்றுஇந்தக்கூட்டம்!! காரணம் வெறும் கழனிக் காடாகவும், கைத்தறிக் குடிசைகள் நிரம்பிய பூமியாகவும் இருந்த இங்கிலாந்து அங்கு ஏற்பட்ட தொழிற் புரட்சியின் காரணமாக, ஆலையூர் ஆயிற்று. ஆலைகள் ஏற்பட்ட இடங்களெல்லாம், பெரிய பட்டணங்களாயின! கைத்தொழில்கள்யாவும் நசிக்க ஆரம்பித்தன — இதனால், கைத்தொழிலிலீடுபட்ட மக்கள், வறுமையாளர்கள் ஆயினர். வறுமையைப் போக்கிக்கொள்ள, ஆலையூர்களை நோக்கிக் குடும்பம் குடும்பமாகப் புறப்படலாயினர்! அனைவருக்கும் எப்படி இடம் கிடைக்க முடியும் ஆலைகளில்? அதனால் நகரில் வலம் வர நேர்ந்த அவர்கள் பிச்சைக்காரர்களாக நேர்ந்தது! ஏதாவது வேலை கிடைக்காதா—என்று சென்ற அவர்கள், வீணர்களாக, 'ஐயா, பிச்சை!' என்று அலற வேண்டியவர்களானார்கள் இது, பதினேழாம் நூற்றாண்டில், இங்கிலாந்திலேற்பட்ட சம்பவம்!! இருபதாம் நூற்றாண்டில், நமது நாட்டில் நாம், இப்போது, இது போன்ற சம்பவங்களைச் சந்திக்கிறோம்.

"சேலத்திலே, கைத்தறித் தொழில் செஞ்சுகிட்டு இருந்தேங்க நூல் கிடைக்கலே—குடும்பம் நொடிச்சுது—அப்புறம் நூல் கிடைக்க ஆரம்பிச்சுது — நெய்து கொண்டுபோன துணி விலை போகலே! என்னங்க செய்றது இப்படி பட்டணக்கரைப் பக்கமாப் போனா, ஏதாவது வேலை செய்து

கதையுலகுக்கு புதிய காணிக்கை
'திராவிட நாடு' இதழில் நீங்கள் படித்து மகிழ்ந்த
கடிகாரம்
தொடர் கதை
தீட்டியது:- அரங்கண்ணல்
நூல் வடிவில்! சிறந்த முறையில்!!
★
விவரங்களுக்கு
புதுமைப் பிரசுரம்—பெண்ணாகடம் S. A.

பிழைச்கலாம்னு சொன்னாங்க. வந்தோம். வேலை, குதிரைக் கொம்பாயிருக்கு! குழந்தை குட்டிங்க, கதறுவதைப் பார்க்கக் கண்றாவியாயிருக்கு, இப்படிக் கிளம்பிட்டேங்க"

கேட்கிறோம் பலரிடமிருந்து! நாட்டின் பெரிய கைத்தொழில், தறித்தொழில் — ஆனால், அது ஆலையூர்களுடன் போட்டியிட முடியாததால், நசிக்கிறது. வாழ முடியாதவர்கள், பட்டணக் கரைகளை நம்பிவந்து, ஏச்சுக்கும் பேச்சுக்கும் ஆளாகி, பிச்சைக்காரர்களாகிறார்கள்.

இப்படி, வறுமையின் காரணமாக, கிராமப்புறங்களைவிட்டு நகரப்புறங்களுக்கு வந்துவிட்டோரை அதிகம் காணலாம் சென்னையில். நடைபாதையில் வசிப்போரில் பெரும்பாலும் அவர்கள்தான்! ரிக்ஷா இழுக்கும் ஒரு ஆளைப் பார்த்துக் கேளுங்கள்:

"ஏம்பா! நீ எங்கே இருக்கிறது?"

"தில்லிக்கேணிங்க"

"உன் சொந்த ஊர் எது?"

"மதுராந்தகத்துக்குப் பக்கத்திலே ஒரு கிராமங்க"

"அங்கேயிருந்து இங்கே ஏன் பட்டணத்துக்கு வந்தே?"

"பொழைக்கத்தாங்க; ஊர்லே, பயிர்த்தொழில் வைச்சு வாழ்ந்துகிட்டிருந்தேங்க. மானம் பார்த்த பூமி. மழையில்லே; என்னா செய்றதுங்க; இப்படி வந்துவிட்டோம்"

இதே பதில்தான் கிடைக்கும். இப்படி நடைபாதைகளில் வசிப்போருடைய குழந்தைகள், காலை முதல் மாலைவரை பிச்சையெடுக்கக் கிளம்பும்—இரவில், சில பெண்கள் காசாசையின் காரணமாக விபரீதத் தொழில்களிலும் ஈடுபடுவதுண்டு — ஆண்களில் பலருக்கு, திடீரென தொழில்செய்யமுடியாமல் போய்விட்டால் அவர்கள் இஷ்டம்போல, அடிதடி, வழிப்பறி, கொலை, களவு முதலிய செயல்களில் ஈடுபடும் அளவுக்குச் செல்கிறார்கள். இதனால்தான் நடைபாதைகளில் வசிப்போராலேயே வழக்குகள் அதிகமாவதாக சர்க்காரின் அறிக்கைகள் சொல்லுகின்றன.

ஆலை வளர்ச்சிக்கு ஆளான இங்கிலாந்திலும், இப்படி வேலையற்றோர், பட்டணக்கரையை நாடிச் சென்று, பலனின்றித் திரிய ஆரம்பித்தபோதுதான், ஏராளமான வழக்குகளும் கொலை களவுகளும நடைபெற்றதாக சரிதம் சொல்லுகிறது. இது, அங்கே, பதினேழாம் நூற்றாண்டில்! இப்படி நகர வீதிகளிலே பவனிவரத் துவங்கிய பிச்சைக்காரர்களின் பிரச்னை, அரசுக்குப் பெரிய தலைவலியாயிற்றும். நகரத்தின் வீதிகளில், வேலையற்ற ஏழைகள், எங்கும் நிரம்பி வழிய ஆரம்பித்தார்கள். கொஞ்சம் பலமும் தந்திரமும் தெரிந்தவன், 'ரௌடியானான், இவர்களிலே இன்னும் கொஞ்சம் மூளைபலம் பெற்றவன், பலரைக் கூட்டிவைத்துக் கொண்டு, 'கொள்ளைக் கும்பலை' தயாரித்தான். அரசுக்குத் தொல்லைகொடுக்கக்கூடிய அளவுக்கு, சிறு சேனைகளைப்போல ஆனார்கள் ஏழைகள். இது, பெரிய ஆபத்தாக உருவெடுத்தது, இங்கிலாந்தில்.

இந்தியாவிலுள்ள மத்ய மாகாணத்தில் ஒரு கொள்ளைக்கூட்டம் இருக்கிறதாம் — அதைப் பிடிக்க மாகாண அரசால் இயலவில்லையாம். இதை, டில்லி மந்திரியான பண்டித பந்த் குறிப்பிட்டு, சமீபத்தில் ஒரு வேண்டுகோள் விடுத்துள்ளார், பொதுமக்களுக்கு— 'மக்களே! நீங்கள்தான் அவர்களைப் பிடித்துத்தரவேண்டும்' என்று. இப்படி அரசே கண்டு அஞ்சக்கூடிய அளவில், ஒவ்வொரு பட்டணங்களிலும், பலவகையான திருடர்கள் இருக்கிறார்கள்! இத்திருடர்களையும் மிஞ்சக்கூடிய அளவில் சூதாட்டக்காரர்கள் அதிகரித்திருக்கிறார்கள்!! இந்தச் சூதாட்டக்காரர்களைப் பிடித்துத் தருமாறு மக்களைப் பார்த்து சென்னை நகர போலீஸ் கமிஷனர் பார்த்தசாரதி அய்யங்கார் வேண்டுகோள் விடுக்கிறார், அடிக்கடி. சமூக விரோதிகளைப் பிடிப்பதிலும் தண்டிப்பதிலும் மக்கள் ஒத்துழைக்க வேண்டியதுதான்! இதுவே நிரந்தர பரிகாரம் என்று இந்த அரசாங்கம் எண்ணுகிறது. தவறு, என்கிறோம் நாம்.

இங்கிலாந்திலே, ஏழ்மையின் காரணமாக இப்படி 'ரௌடி'கள் உலவ ஆரம்பித்ததும், அவர்களை ஒழிக்கக் கடுமையான சட்டங்கள் கிளம்பின! தூக்குமேடை—மரண தண்டனை யென்றெல்லாம் விதிக்கப்பட்டது. "பிச்சைக்காரனா நீ! வா, இப்படி. உன்னால் வேலை செய்யவே முடியாதா? சரி!" என்று சொல்லி, பிச்சை எடுக்க 'லைசென்ஸ்' முறையைக் கொண்டுவந்தனர். உடலில் வலிவும் உழைக்கச் சக்தியும் பெற்றிருந்தோர் பிச்சையெடுத்தால் அவர்களை கண்ட கண்ட இடத்தில் சாட்டையாலடித்தனர்! எந்தக் கிராமத்திலிருந்து வந்தார்களோ அந்தக் கிராமத்துக்கு திருப்பி அனுப்பப்பட்டனர்! அவன் தப்பியோட நினைத்தால் அவன் நெற்றியில் "V" என்று சுட்டுத் தழும்பு உண்டாக்கினர். நாடோடிகளின் வலது காதில், துளைபோட்டும், மக்களுக்கு எச்சரிக்கை செய்யப்பட்டது. இப்படி ஒரு பக்கம் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுக் கொண்டிருந்த இதே நேரத்தில் தான், பெரிய பெரிய பஞ்சாலைகளும், நிலக்கரிச் சுரங்கங்களும், பாங்கிகளும், அங்கே அரும்பிக்

மாநில மாநாட்டில் ஓவியக் கண்காட்சி

—o—

திருச்சியில் நடைபெறவிருக்கும் தி. மு. கழக மாநில மாநாட்டில் வழக்கம்போல் ஓவியக் கண்காட்சியும் இடம்பெற ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

ஓவியக் கலைப் (சித்திரம் தீட்டும்) பயிற்சியில் தேர்ச்சியுள்ள தோழர்கள் தங்கள் தகுதியைக்குறிப்பிட்டு, "பொறுப்பாளர், 'நம் நாடு' இராயபுரம், சென்னை—13" என்ற முகவரிக்கு விண்ணப்பித்துக்கொள்ள வேண்டுகிறோம்.

இம்முயற்சிகளில் பங்கு பெறும் தோழர்கட்கு உணவு வசதி, தங்கும் இடவசதி மட்டுமே செய்து கொடுக்கப்படும். பொருள் ஊதியம் கொடுப்பதற்கில்லை.

விண்ணப்பங்கள் கிடைத்த பிறகு, குறிப்பிட்ட இடத்திற்கு வரும்படி கடிதம் எழுதப்படும். அதுசமயம் வரும்படி வேண்டிக் கொள்கிறோம்.

பொறுப்பாளர்,
'நம் நாடு,' சென்னை—13.

கொண்டிருந்தன. அது ஒரு பக்கம்! இது, இன்னொரு பக்கம்!!

அங்கே, இது; பதினேழாம் நூற்றுண்டில், இங்கே, இருபதாம் நூற்றுண்டில் இதே நிலைமைகளைக் காண்கிறோம். இங்கிலாந்து, கழனிகள் நிரம்பிய பூமியல்ல. திராவிடமோ, கழனிவளம் மிக்க பூமி. அங்கே கழனிவளம் இல்லாததாலும், ஆலையே பிரதானம் என்கிற சூழ்நிலை வளர்ந்ததாலும், பெரும்பாலான மக்கள் ஆலைகளை நாடிச் சென்று அங்கே வேலையில்லாததால், 'கிராமத்துக்குத் திரும்பிச் சென்று என்ன செய்வது' எனும் கவலையால், வீதியில் திரிய ஆரம்பித்து, சட்டத்துக்கும் சர்க்காரின் அடக்குமுறைக்கும் ஆளானார்கள். அப்படிப்பட்டவர்களைப் பிடித்து, ஆஸ்திரேலியாக் கண்டத்துக்கும், அமெரிக்காவுக்கும் இங்கிலாந்து ஏற்றி அனுப்பவும் முடிந்தது. நமக்கு, எங்கே நமது ஏழைகளை அனுப்ப புதுஇடம் இருக்கிறது? திரைகடல் ஓடி திரவியம் தேடச் சென்றவர்களும் திருப்பி அனுப்பப்பட்டுக் கொண்டிருக்கிறார்களே! நாம்தான், இங்குள்ள இல்லாதவர்களின் நிலையைச் சரி செய்யவேண்டும். இதற்கு என்ன வழி? இங்கிலாந்தைப்போல, நமது நாடு பெரிய ஆலையூர்களைப் பெற்றிருக்கவில்லை ஆனால், பல நகரங்களிருக்கின்றன. இந்த நகரங்கள் யாவும், வடநாட்டு ஆலையூர்கள் செய்தனுப்பும் சாமான்களை விற்கும் மார்க்கெட்டுகளாக இருக்கின்றனவே ஒழிய, பலருக்கு வேலை கொடுக்கும் ஆலையூர்களாக இல்லை. இங்கிலையில், கிராமங்களிலிருந்து நகரங்களை நோக்கிச் செல்லும் மக்களுக்கோ குறைச்சலில்லை. பத்து ஆண்டுகளில் சென்னை மாநகரில் மட்டும் சுமார் ஐந்து லட்சம்பேர் புதிதாகக் குடிபுகுந்திருக்கிறார்களாம். அப்படிக் குடிபுகுந்து ஆபீசுகளிலும் கடைமண்டிகளிலும், இருக்கும் ஒரிரண்டு மில்களிலும் வேலை பார்த்தாலும்—பலருக்கு வேலைகள் இல்லாத காரணத்தால், நடைபாதையை மாளிகைகளாக்கிக் கொண்டும், நடுநிசித் தொழில்களுக்குத் தங்களைப் பக்குவப்படுத்திக்கொண்டும்—இரண்டும் இயலாவிட்டால், 'ஐயா, பசிக்குதே!' என்று சட்டியைத் தட்டிக் கொண்டும் இருக்கிறார்கள்.

இவர்களது பிரச்னையைத் தீர்க்க 'பிச்சைக்கார விடுதி' திறந்து விடுவதால்மட்டும் முடியாது. சட்டங்கள்மூலம் கொட்டிவிட்டால்மட்டும் தீராது, இப்பிரச்னை.

நகரம் நோக்கி இவர்கள் வராதவாறு, கிராமங்களிலே உள்ள நிலங்கள் யாவும், இவர்களுக்கும் உழைப்பதற்குரிய இடங்களாகப் பகிர்ந்து அளிக்க வேண்டும். நல்லவேளையாக நமது நாடு இங்கிலாந்தைப் போலன்றி, நிலவளம் நிரம்பியதாக இருக்கிறது! அதனால், பலருக்கு வாழ்வளிக்க முடியும்!! அடுத்தபடி பல ஆலைகளை உண்டாக்கி, ஆலையும் குடிசைத் தொழிலாளர்களை அங்கு பணிபுரியச் செய்து, அவர்களுக்கும் வாழ்வளிக்க முடியும். இதற்கு, டில்லி பீடம், கருணை காட்டவேண்டும்.

நல்லதொரு சமதர்ம அமைப்பு, அதை மடைபெறச் செய்யும் அரசியல் அதிகாரம் இரண்டும் ஏற்பட்டாலன்றி, இல்லாதவர்களின் கூட்டத்தைக் குறைத்துவிட முடியாது, வளமிருக்கிறது, இங்கே—ஒவ்வொருவரையும் வாழச் செய்ய! ஆனால், வழிகள்தான் இல்லை!! அந்த வழிகளைக் காண முயலாமல், 'அன்னதான சத்திரம்' கட்டி, இல்லாதவர்களின் பிரச்னையைத் தீர்க்க முயல்வது—வெறும் பகல் கனவேயாகும், பலிக்காது.

★

பிரிட்டிஷ் பொதுத் தேர்தல்

வரும் 26ந் தேதி, பிரிட்டனில் பொதுத்தேர்தல் நடைபெற இருக்கிறது. ஓய்வு பெற்ற சர்ச்சிலும், தொழிற் கட்சித் தலைவர் அட்லியும் தீவிரமாகத் தேர்தல் பிரச்சாரம் செய்து வருகின்றனர்.

⁕

"நான்கு வல்லரசு—அமெரிக்கா பிரிட்டன், பிரான்ஸ், ரஷ்யா—களின் மாநாடு ஒன்றைக்கூட்டி, உலக சமாதானத்துக்கு முயல்வோம்!"—என்பதுதான் சர்ச்சில் கட்சியின் மூல முழக்கம்.

"இது, தேர்தல் வெடி! எங்கள் சர்க்கார் ஆட்சிக்கு வந்தால், நிரந்தர சமாதானத்துக்காகப் போராடும். அணுகுண்டுகளைத் தடைசெய்யப் பாடுபடுவோம்."—என்பது அட்லி கட்சியின் தர்ச்சனை.

⁕

பெரிய தொழிலான பிரிட்டிஷ் துணி உற்பத்தி, இப்போது திண்டாட்டமானநிலைக்குவந்திருப்பது கன்சர்வேடிவ்களின் பணக்காரத் தன்மையான திட்டங்களால் என்று தொழிற்கட்சி, குற்றம் சாட்டுகிறது.

தொழிற்கட்சி கூறும் 'சோஷியலிசப்பாதை, காலம் கடந்துவிட்டகொள்கையென்று, கன்சர்வேடிவ் கட்சி தாக்குகிறது.

•

பொதுத்தேர்தலில் கன்சர்வேடிவ், தொழில் கட்சி, லிபரல் கட்சி, கம்யூனிஸ்டுக் கட்சி என்பவைகளோடு வேல்ஸ் தேசியக்கட்சி எனும் கட்சியும் போட்டியிடுகிறது. வேல்ஸ் ஒரு தனிஅமைப்புடன் விளங்கவேண்டும் என்கிற கொள்கைகொண்ட இக்கட்சியின் சார்பில் ஒரு கல்லூரி மாணவர் நிறுத்தப்பட்டுள்ளார்! இம்மாணவர், இப்போது, சிறையில் இருக்கிறாராம்!!

⁕

கன்சர்வேடிவ் கட்சியின் சார்பில் 33, தொழிற்கட்சியின் சார்பில் 41, லிபரல்கள் 14, கம்யூனிஸ்டு 1, வேல்ஸ் கட்சி 1, ஆகமொத்தம் 90 பெண்மணிகளும் தேர்தலில் போட்டியிடுகின்றனர்.

உலகம் வியக்கும் மேதை சர்ச்சிலும், தேர்தலில் நிற்கிறார்! அவரையும் மில்னர் எனும் தொழிற்கட்சி அபேட்சகர் எதிர்க்கிறார். மில்னர், ஒரு பழைய மின்சாரத் தொழிலாளியாம். நகைச்சுவையுடன் பேசக்கூடிய இவரை, ஒரு நல்ல போட்டி என்றே சொல்லுகின்றனர்.

புதிய உற்சாகம்

தம்பி,

முன்பு எழுதிய கடிதம் கண்டு மகிழ்ச்சி தெரிவித்ததற்கு என் நன்றி. நமது இயக்கம் நன்றாகத் தழைத்திருப்பது கண்டு அருவருப்பு அடைபவர் பலர் உண்டல்லவா—அவர்கள், அவர்களின் பண்புக்குத் தக்கபடி பழிசுமத்துவதும், புகார் கிளப்புவதும், வதந்திகளை உலவவிடுவதும், வம்புக்கு இழுப்பதுமாகத்தான் இருப்பர், நாம் அவைகளைப் பற்றிக் கவலைப்படக்கூடாது; நாம் கவலைப்பட வேண்டும், கோபமடைய வேண்டும் என்பதற்காகத்தானே அவர்கள் அவ்விதமெல்லாம் பேசுவதும் எழுதுவதும்! அந்த வலையில் நாம் விழலாமா! நமக்கு நிரம்ப வேலை இருக்கிறதே தம்பி! நமது சக்திக்கு மீறியகாரியத்தை அல்லவா நாம் மேற்போட்டுக்கொண்டிருக்கிறோம். உன் நினைவு முழுவதும் அதிலே செல்லவேண்டும், ஆமாம், சில்லரைகளில் சிந்தனையைச் செலவிடக்கூடாது.

நாட்டு நடவடிக்கைகள் பலவற்றிலும் தொக்கிக்கிடக்கும் உண்மைகளைக் கண்டறிந்தால் நாம் எடுத்துக்கொண்டுள்ளமுயற்சி எவ்வளவு தூய்மையும் வாய்மையும் கொண்டது என்பது விளக்கமாகும்.

சென்றகிழமை வடக்கே ஒருமுதுகிழவர் சிறைக்கோட்டம் அழைத்தேகப்பட்டார். மாஸ்டர் தாராசிங் பன்முறை சிறை சென்றவர். சீக்கியப் பெருங்குடி மக்களின் ஒப்பற்ற தலைவர்—காங்கிரஸ்காரர் அல்ல. அவர் காங்கிரஸ்காரராகி இருந்தால், பாபுராஜேந்திரப் பிரசாத், அபுல்கலாம் அசாத் போன்றோரின் வரிசையில் இடம் பெற்றிருப்பார். ஆனால் அவருக்கு ஒரு குறிக்கோள் இருக்கிறது—கருவிலே உள்ள குழவிபோன்றதாகத்தான் இன்னமும் இருக்கிறது—முழு வளர்ச்சி அடையவில்லை. அந்தக் கருவையே சிதைத்திடத்தான் அவர்மீது கடுமையான அடக்குமுறை வீசப்பட்டு வருகிறது.

தாராசிங், சீக்கியர்களுக்காக ஒரு தாயகம் கேட்கிறார். சீக்கியமொழி கலாசாரம், மார்க்கம் ஆகியவைகள் பாதுகாக்கப்பட்டு, வளமடைய வேண்டுமானால், 'பஞ்சாபி மொழிபேசும் பிராந்தியம்' ஏற்படவேண்டும் என்று கிளர்ச்சி செய்து வருகிறார்; சில ஆண்டுகளாகவே. சீக்கியர்களிலே, காங்கிரஸ்கட்சிக்குப் பலதேவ்சிங்குகள் அடிக்கடி கிடைக்கத்தான் செய்கிறார்கள்; நேருபண்டிதரும் அடிக்கடி அந்தப்பகுதி சென்று பவனிவரத்தான் செய்கிறார், என்றாலும் தாராசிங்கின் 'தாரகம்' பஞ்சாப்பில் வெற்றிபெற்று வருகிறது.

பஞ்சாப் மாகாணம், வங்காளம் போலவே, பாகிஸ்தான் அமைப்பின்போது, இரண்டாக்கப்பட்டது, உனக்குத் தெரியும். இந்திய பூபாகத்துடன் இணைந்து இருக்கும் பஞ்சாபிலே அமிர்தசரஸ் இருக்கிறது—இது சீக்கியர்களின் காசி! தங்கக்கோயில் ஒரு தடாகத்தின் நடுவே இருக்கிறது, கோயிலில், இராமன்—கிருஷ்ணன்—முருகன்—நான்முகன் இப்படிச் சிலைகள் கிடையாது — சீக்கியரின் வேத புத்தகம் வைக்கப்பட்டிருக்கிறது—சீக்கியர்கள் அங்கு சென்று தூய மன நிலை பெறுகிறார்கள். காலைச் சூரியனொளியில் தங்கக் கோயிலின் நிழலுருவம் தடாகத்திலே தெரிகிறது, காண்பதற்கு அருமையானதோர் காட்சி. நான் அக்காட்சியைக் கண்டு களித்திருக்கிறேன். சீக்கியர்களிடையே உள்ள ஒற்றுமை உணர்ச்சியையும் அதுபோது காண முடிந்தது.

மொழிவழி அரசு அமைந்தால்தான், சுயராஜ்யம் பொலிவும் வலிவும் பெறும் என்று காங்கிரஸ் தலைவர்களே பேசிவந்தனர். அந்த முறையிலே பார்க்கும்போது, தாராசிங் கேட்கும் 'பாஞ்சாலம்' அமைக்கப்படவேண்டியதுதான் நியாயமாகும். ஆனால் காங்கிரஸ் சர்க்கார் இதை எதிர்க்கிறது—பிடி ஆட்களைப் பெற்று, இந்தக் கிளர்ச்சியை ஒழித்துக் கட்டப் பார்க்கிறது. தாராசிங் பணிய மறுக்கிறார்! சிறையில் தள்ளுகிறார்கள்—தணலில் தங்கமாகிறார். சீக்கியர்களிலேயே சிலரைப் பிடித்து அவரை நிந்திக்க வைக்கிறார்கள்; அவர், அவர்களின் நிலைமையைக் கண்டு பரிதாபப்படுகிறார். அவர் எப்போது கிளர்ச்சி துவக்கினாலும் இளைஞர் அணிவகுப்புத் துணைக்கு நிற்கிறது; அறப்போரில் ஈடுபட ஏராளமானவர்கள் முன் வருகிறார்கள். எனினும், மாஸ்டர் தாராசிங் பற்றியும், அவர் நடாத்திவரும் இயக்கத்தைப்பற்றியும், நமக்கெல்லாம் அதிகமாகத் தெரியாது—தெரிந்துகொள்ளும் வாய்ப்பு ஏற்படுவதில்லை. இருட்டடிப்பு! ஆமாம், இங்கே திராவிட நாடு பிரிவினை எவ்வளவு வேகமாக வளர்ந்திருக்கிறது என்பது எப்படி மற்றப் பகுதியினருக்குத் தெரியாதபடி 'இருட்டடிப்பு' இருக்கிறதோ, அதுபோல, பாஞ்சாலக் கிளர்ச்சி பற்றிய முழுத் தகவலும் நமக்குத் தெரிவதில்லை—இருட்டடிப்புத்தான்!

நாக நாடு கிளர்ச்சிபற்றி ஒவ்வோர் சமயம் துண்டு துணுக்குகளாகச் செய்திகள்வருகின்றன-தொடர்ந்து அங்கே என்ன நடைபெறுகிறது என்பது தெரிவதில்லை—காரணம், இருட்டடிப்புத்தான்!

மணிப்பூரில் தனிநாடு கிளர்ச்சி அரும்பியிருக்கிறது—சேதி தாராளமாகக் கிடைப்பதில்லை — இருட்டடிப்பு!

பர்மாவில், பல ஆண்டுகளாகக் கிளம்பி, படை பலத்துடன் இன்று நடைபெற்றுக்கொண்டிருக்கிறது கரேன் நாடு கிளர்ச்சி—இதுவும் இருட்டடிப்பின் காரணமாக, முழுவதும் நமக்குத் தெரிவதில்லை.

இந்தோனேஷியாவில் தாருல் இஸ்லாம் என்றோர் கிளர்ச்சி இருக்கிறது.

பயங்கரமான நிகழ்ச்சிகள் ஏற்படும்போதுமட்டுமே இவைபற்றி ஓரளவு அறிந்துகொள்ளமுடிகிறது —தொடர்ச்சியாகச் செய்திகள் தரப்படுவதில்லை.

திராவிடநாடு கிளர்ச்சி குறித்தும்

இதுபோலத்தான் —எப்போதாவது திடுக்கிடக்கூடிய சம்பவங்கள் நேரிட்டால், இந்திய பூபாகத்தின் மற்றப் பகுதிகளில் ஒரு சிறிது தெரியும்; மற்றச் சமயத்தில் இருட்டடிப்பு! சென்ற ஆண்டு, 'இரயில் நிறுத்தக் கிளர்ச்சி' நடைபெற்ற போது, இந்தியாவின் எல்லாப் பகுதியிலும், திராவிடநாடு கிளர்ச்சி பற்றி, ஓரளவு தெரிந்துகொள்ள வாய்ப்புக் கிடைத்தது. பிறகு, எப்போதும்போல மூடிவிட்டனர்.

இந்தக் குறைபாடு நீங்க, திராவிடநாடு கிளர்ச்சிபற்றி, பிற இடங்களில் அறிந்துகொள்ளத்தக்க வகையில், ஆங்கில ஏடு நடத்துவது என்ற எண்ணம் எனக்கு நீண்டகாலமாக உண்டு, இருமுறை அதற்கான முயற்சி எடுத்து முறிந்துபோனதுமுண்டு. இப்போதும் அந்த எண்ணம் இருந்தபடிதான் இருக்கிறது—தக்க வாய்ப்பு ஏற்படவில்லை. தம்பி! நமக்கு இருக்கும் குறைபாடுகள் இவை போன்றவையே தவிர, இல்லாததும் பொல்லாததுமாக நம்மைப் பற்றி, இடுப்பொடிந்ததுகளும் இஞ்சி தின்றதுகளும், பேசுவதாலும் எழுதுவதாலும் இல்லவே இல்லை, என்பதை முதலில் மனதிலே நன்கு பதியவைத்துக் கொள்ள வேண்டுகிறேன். அந்தக்கட்டத்தைத் தாண்டிவிட்டோம்!! வீசப்படவேண்டிய பழிச்சொல் அவ்வளவும், எவ்வளவு வேகமாகவும் திறமையுடனும் வீசப்படவேண்டுமோ அவ்விதம், வீசிப்பார்த்தாகிவிட்டது. இப்போது கிடைப்பதெல்லாம் மறுபதிப்புகள்—எளிய பதிப்புகள்—இலவசவெளியீடுகள்!! இவைகளைப் பற்றிக் கவலைப்படவேண்டிய நிலையில் நாம் இல்லை.

அங்கே வெடிப்பு இங்கே கொந்தளிப்பு. இங்கே குழப்பம், என்றெல்லாம் எழுதுகிறார்கள், படிக்கும்போது ஆத்திரமாக இருக்கிறது என்று கூறி இருக்கிறாய். தம்பி! இதற்கு ஏன் ஆத்திரம், ஆயாசம்? நம்மைப்பற்றிய 'செய்திகள்' பிற கட்சிக்காரர்களும் இதழ்களும் கூர்ந்து கவனிக்கப்படவேண்டிய அளவுக்கு, நாட்டிலே முக்யத்துவம் பெற்றுவிட்டன என்பதுதானே அதன் பொருள். இதற்கு ஆயாசப்படுவதா!! பேதமும் பிளவும், வெடிப்பும் குழப்பமும் ஏற்பட்டால்தான் நமது இயக்கத்திலிருந்து தப்பித்துக்கொள்ள முடியும் என்று கிலிகொண்டவர்கள், இப்போது கிறலைக்கண்டு வெடிப்பு என்று கூவிக்களிப்படைகிறார்கள்! இங்கிருந்து செல்பவர்களும், இங்கு இருந்துவிட்டு வந்தவர்கள் என்ற காரணத்தாலேயே, வாழ்த்தும் வரவேற்பும் பெறுகிறார்கள்—இந்த உபசரிப்பும் உலாவும் சில நாட்களுக்கு நடைபெறும், நமது மாஜி நண்பர்கள் என்ற முறையில் அவர்கள் எப்படியோ ஒன்றுமகிழ்ச்சிபெறட்டும், என்பதுதான் என் எண்ணம். அவர்களை எத்தனை நாளைக்குப் பயன்படுத்திக் கொள்ள முடியும் என்பது தெரியாததா!! இவ்விதம் 'பயணம்' நடத்தியவர்கள் பலர்; அவர்களிலே யார் இன்று, உருவம் தெரியும் நிலையில் இருக்கிறார்கள். ஆயினும் எனக்கு—உண்மையில் கூறுகிறேன்—நமது இயக்கத்தைவிட்டு யாராவது பிரிந்து செல்கிறார்கள் என்றால், வருத்தந்தான். கூடுமான வரையில், கூடிவாழ்வதைத்தான் நான் விரும்புகிறவன் — சுவரிலிருக்கும் சிறு ஆணி பெயர்க்கப்பட்டாலும், ஆபத்து இல்லை என்றாலும் பார்க்க நன்றாக இராது என்று எண்ணுபவன். இந்த நோக்குடனேயே நான், சிலர் வெளிஏற எண்ணும்போதெல்லாம், சமரசத்துக்காக முயன்றிருக்கிறேன். அவர்கள் ஏற்கனவே வேறு இடத்தில் 'அச்சாரம்' வாங்கிவிட்டார்கள் என்று தெரிகிறவரையில், சமரசம் பேசுவேன்—'கைமாறிவிட்டது' என்று தெரிந்தால் என்ன செய்வது, சரி அவ்வளவுதான்! என்று எண்ணிக் கொள்வது. அவர்கள் வெளி ஏறி வேறிடம்சென்றதும், அங்கு கொஞ்சம்காரசாரமாகப்பேசி,கண்டித்துத் தானே 'சபாஷ்'பட்டம் பெறவேண்டும்,எனவேபேசுகிறார்கள்.ஏசுகிறார்களே என்று வருத்தப்படலாமா—இங்கே இருந்தபோது எவ்வளவு புகழ்ந்திருக்கிறார்கள், எவ்வளவு பற்றுப் பாசம் காட்டி இருக்கிறார்கள்! வழியே போகிறதுகள், வம்புக்கு வருபவர்கள், தொடர்பே அற்றதுகள், இப்படிப்பட்டவர்களெல்லாம், எடுத்தேன் கவிழ்த்தேன் என்று நம் இயக்கத்தைப் பற்றிப் பேசித்திரியும்போது, இருந்துவிட்டுப் போனவர்கள், இயன்றதைச் செய்தவர்கள், நண்பர்களாயிருந்தவர்கள், பிரிந்த காரணத்தால் இரண்டோர் இடத்தில் கடுமையாகத் தாக்கினால், குடிமுழுகிவிடாது. அவர்கள் ஆசையும் தீர்ந்துபோகட்டுமே பாபம்!

இந்தச் சம்பவங்களைப்பற்றி எல்லாம் படிக்கும்போது தம்பி! நாம் இயக்கத்தை நடத்திச் செல்வதில் இதுவரை காட்டிவரும் தோழமையைவிட, அதிக நேர்த்தியான தோழமையைக் காட்டி வரவேண்டும் என்ற பாடத்தைத்தான் பெற வேண்டும். மற்ற எந்த இயக்கத்திலும் இல்லாத அளவு தோழமை உணர்ச்சி நமது கழகத்திலே இப்போது இருக்கத்தான் செய்கிறது. அந்தப் பண்பு மேலும் வளரவேண்டும். தேர்தல் எனும் முறையே இன்றி, ஒரு இயக்கத்தின் தலைவர் பார்த்து வைத்ததுதான் சட்டம் என்றிருக்கும்போது, தோழமை உணர்ச்சி அல்ல, பயம்போதும். நாமோ, சிற்றூர் கிளைக்கழக முதற்கொண்டு, பொதுச்செயலாளர் வரையில், தேர்தல்முறை வைத்திருக்கிறோம். தேர்தல் என்றால், போட்டி, கட்சி சேர்த்தல் என்பதுதான் உடனடிப் பொருள். எனவே தேர்தலின் காரணமாகச் சிறு சிறு சச்சரவுகள் எழத்தான் செய்யும். இந்தச் சச்சரவும், தேர்தல் ஊழல்களும், நம்முடைய கழகத்திலே மிக மிகக் குறைந்த அளவிலேதான் இருக்கிறது — வேறு அமைப்புகளுடன் ஒப்பிடும்போது. சின்னாட்களுக்குமுன்பு, மதுரையில் நடைபெற்ற ஒரு தேர்தலின்போது —வாய்ச் சண்டை வளர்ந்து, மேஜை நாற்காலிகள் வீசிக்கொள்ளப்பட்டன என்று படித்திருப்பாய். இது, காங்கிரஸ் கமிட்டித் தேர்தலில். அதுபோலவே வடார்காடுமாவட்ட காங்கிரஸ் கமிட்டி தேர்தலிலும் 'ரசாபாசம்' நேரிட்டதாகச் செய்தி வந்தது. இலங்கையில் தொழிலாளர் அமைப்பிலே நடைபெற்ற தேர்தலில், போட்டி, பூசல் அளவுக்குச் சென்று, தேர்தல் வேலையையே வெற்றிகரமாகச் செய்யமுடியாமற் போய்விட்டது. இவைகளை எடுத்துக் காட்டுவதன் காரணம், நமக்குள்ளாகத் தேர்தல் தகராறு எழுவது சரிதான் என்று வாதாட அல்ல. தேர்தல் தகராறுகள் நம்மில் பிறரிடம் இருக்கும் அளவுக்கு இல்லை என்பதை நினைவுபடுத்தி, இப்போது எழும்பியுள்ள சிறு தகராறுகளும் எழாதவகையில் இனி நாம் பணியாற்றவேண்டும் என்பதைக் கூறத்தான். ஏனெனில், நமது இயக்கத்திலே காணக் கிடக்கும் மாண்புகளை, மாற்றார்கள்

போற்றமாட்டார்கள்; ஆனால், ஒரு சிறு தகராறு தெரிந்தாலும் போதும், சுட்டிக்காட்டிச் சிரிப்பார்கள். இதற்கு இடமளிக்கும் முறையில் யாரும் நடந்துகொள்ளக் கூடாது. தேர்தல் காரணமாகச் சிறு மனத்தாங்கல் ஏற்பட்டுவிட்டிருந்தாலும், தாங்கிக்கொள்ளும் பெரிய மனமும், மீண்டும் ஒன்றுபட்டுப் பணியாற்றும் தோழமை உள்ளமும் வேண்டும். கழகத்தின் பொதுப் பிரச்சினைபற்றிக் கவனம் செலுத்திக் காரியமாற்ற, நமது பொதுச் செயலாளருக்கு நேரமும் நினைப்பும், திறனும் வாய்ப்பும் பயன்பட இடமளிக்கவேண்டுமேயல்லாமல், இத்தகைய தேர்தல் தகராறுகள், இடம் பிடிப்பதில் ஏற்படும் இடர்ப்பாடுகள் ஆகியவற்றை எல்லாம் கவனித்து ஆவன செய்யும் தொல்லையை, அவருக்கு நாம் தருவது முறையாகாது. இதிலே, தேர்தலில் வெற்றிபெற்றவர்களுக்குத்தான் முழுப் பொறுப்பு இருக்கிறது. அவர்கள்தான், தத்தமது வட்டாரத்தில் காணப்படும் மனத்தாங்கலைத் துடைத்திட முயற்சிக்கவேண்டும். கழகத்துக்குள், அடிப்படைப் பிரச்சினைமீது அல்ல, தவறான எண்ணம், மனச் சங்கடம் ஆகியவற்றின் காரணமாக எழும் சிக்கலைத் தீர்க்கும் திறம் இல்லாமற் போய்விட்டால், பிறகு எங்ஙனம், பொதுமக்களை அணுகி அவர்களின் சந்தேகங்களைப் போக்கி அவர்களை இயக்கத்தில் கொண்டுவந்து சேர்ப்பது? எனவே, வெற்றிபெற்ற தோழர்கள், தத்தமது வட்டாரத்தில் ஒற்றுமையும் தோழமையும் மலருவதற்குப் பாடுபட்டு அதிலே வெற்றி காணவேண்டும்—தேர்தலில் பெற்ற வெற்றியைவிட இந்த வெற்றியையே பெரிதென்று எண்ணவேண்டும்.

வடநாடு, தென்னாட்டைச் சுரண்டிக்கொண்டுதான் வருகிறது, ஐந்தாண்டுத் திட்டத்திலே ஓரவஞ்சனையாகத்தான் நடந்துகொண்டது என்ற கருத்தும்,

இந்தியைத் திணிப்பது, ஏதேச்சாதிகார முறை, மொழிவெறி, ஏக பாஷைப் பித்தம், இதைக் கண்டித்தே தீரவேண்டும், இந்த முயற்சியை எதிர்த்தேயாகவேண்டும் என்ற கருத்தும்,

இப்போது காங்கிரஸ் வட்டாரத்திலேயே வெகுவாகப் பரவிவிட்டது—வெளிப்படையாகவே பேசப்படுகிறது.

இந்த நல்ல சூழ்நிலையைக் கழகத் தோழர்கள் தக்க விதத்தில் பயன்படுத்திக்கொள்ளவேண்டும்.

திராவிட நாடு கேட்பதற்கான காரணங்களை, முன்பு, காதால் கேட்பதும் ‘பாபம்’ தேசியத்துக்கு விரோதமான காரியம் என்று எண்ணிக்கொண்டிருந்த காங்கிரஸ்காரர்களிலேயே ஒரு பகுதியினர், இப்போது திராவிட நாடு பிரச்சினையைத் தெரிந்துகொள்ள ஆவல் காட்டுகிறார்கள். அவர்கள் உணரும்படியும் ஒப்பும்படியும் எடுத்துக்காட்ட, நம்மிடம் ஏராளமான காரணங்கள், புள்ளி விவரங்கள் உள்ளன. அவர்களின் மனதைப் பக்குவப்படுத்தும் முறையில், நாம் அவைகளை எடுத்துக் கூறவேண்டும். இந்தப் பெரிய பொறுப்பை ஏற்றுக்கொள்ளும் நாம், அதற்கேற்றபடி பெரிய மனம் படைத்தவர்களாகித் தீரவேண்டும்.

இருட்டடிப்புபற்றிக் குறிப்பிட்டேன்.

அது, வெளியே நமது கருத்தும் வளர்ச்சியும் தெரியவிடாமல் செய்வதுபற்றிமட்டுமல்ல, இங்கேயே உள்ள இருட்டடிப்புபற்றியும்தான்.

இங்குள்ள ‘பத்திரிகைகள்’ நமது மூலாதாரக் கொள்கையை மறுப்பன. எனவே, அந்தக் கொள்கையை இருட்டடிப்புமூலம் சாகடிக்கலாம் என்று எண்ணுகின்றன. இதிலிருந்து நாம் தப்பவேண்டுமானால், ஒவ்வொரு கிளைக் கழகமும் தனிப்பட்டவர்களும்கூட, இயக்கக் கருத்துகளையும், அக்கருத்துகளுக்கு ஆக்கம் தரும் நிகழ்ச்சிபற்றியும், அவ்வப்போது துண்டு அறிக்கைகள் வெளியிட்டு, வீடுதோறும் வழங்கவேண்டும். நமது இயக்கக் கருத்துகள் பொதிந்த பாடல்களையும், நாடகங்களையும் மேலும் வளமும் வண்ணமும் உள்ளதாக்கவேண்டும். புள்ளி விவரங்களைத் தயாரித்து, முச்சந்திகளில் பொறித்துவைக்கவேண்டும். கழகத் தோழர் ஒவ்வொருவரும் இம்முறையில் ஏதேனும் ஓர் பணியாற்றி, இயக்கத்துக்குத் தொண்டாற்றவேண்டும். ஒரு திங்கள் இம்முறையில் பணியாற்றிப் பாருங்கள், உங்கள் மனதுக்கே புதியதோர் உற்சாகம் பிறக்கும். நோக்கம் இவ்வகையில் திரும்பினால், பிறகு, சிறு சச்சரவுகள்பற்றிய சிந்தனையும் அற்றுப்போகும். சீரழிவானவர் வீசும் சிறுசொல்லும் நம்மைச்சுடாது.

அன்புள்ள,

அண்ணாதுரை.

3-பக்கத் தொடர்ச்சி

பிலே மந்திரம் வேலாசாமி வருவார் கும்பாபிஷேகம் குப்புசாமி கிளம்புவார், பாரதப் பிரசங்கி பன்னிருகையாரென்ன, இராமாயணக்கதாப் பிரசங்கி இரணரங்க பாகவதரென்ன, சாஸ்திர கேசரிகள், சன்மார்க்க சண்டமாருதங்கள், இத்யாதி, இத்யாதி. அவரவர்களுக்கு தனித்தனிபாணி! அவரவர்களுக்கு தனித் தனி பூஜா முறைகளும் உண்டு! “ஏய்! பயலே! கடவுளையா இல்லை என்று பேசுகிறாய்—நீ எங்கே இருந்து பிறந்தாய்”-என்று துவங்கி கொல்லைவரை சென்று, வெண்ணெய் உண்ட வாயன் கோபால கிருஷ்ணன், மேனி எல்லாம் வெண்ணெய் பூசிக்கொண்டுவந்து யசோதை எதிரே நிற்க, அந்த அம்மை பாலகனின் வாயை முத்தமிட்டு, உச்சிமோந்து, மகிழ்கிறார்கள் என்று கதையிலே கூறுகிறார்களே, அதுபோல, மேனி எலாம் வாடை கிளம்பும்நிலையில் வர, ‘ஆதரவாளர்கள்’ நரகல் நடையினரின் உச்சிமோர்ந்துமகிழ்வர். வேறுசிலர் உளர் — “அணு அணு என்று இன்று பேசுகிறார்கள் அமெரிக்கர்—நமது பாரத நாட்டிலே ‘அணுவினுக்கணுவாய் நின்ற ஆதிமூலமே’ என்று, இன்றா நேற்றா, இருபதாண்டுகளுக்கு முன்பா, யுகயுகாந்திரமாகக் கூறினர். இந்த உண்மையை உணரமுடியாத உதவாக்கரைகள், உற்பாத பிண்டங்கள், ஊன் சுமந்து திரியும் உலுத்தர்கள், கடவுளே இல்லை என்று கத்துகின்றன” என்று பேசி, படியைக் காலாக்கினார்களா, பாதாம் கரைத்திருக்கிறார்களா, சீனி உண்டா, சிறிதளவு குங்குமப்பூ சேர்த்தார்களா என்று கேட்டுப் பருகி, நாட்டிலே ஆஸ்திகத்தை நிலைநாட்டிவிட்டதாக எண்ணிக்கொண்டு, நித்ரா தேவியுடன் ஆனந்தமாக ‘ஐக்யம்’ ஆகிவிடுவர். வந்தவண்ணம் இருக்கிறார்கள், வகை வகையாக! எனினும், சீர்திருத்த இயக்கம் வளருகிறது! புதுப்புது முகாம்கள் ஏற்படுகின்றன! ஆச்சரியம் அதிலே இல்லை, படிப்படியாக, ஏசிப் பேசுவோரே, மெள்ள மெள்ளச் சீர்திருத்தத்தின் பிடியிலே சிக்கிக்கொள்கின்றனர்! குன்றக்குடி அடிகளார்மட்டும் விதிவிலக்கா! அவரும் சிக்கிக்கொண்டிருக்கிறார்! சிரமப்படுகிறார் என்று கூடக் கூறவேண்டி இருக்கிறது.

கடவுள் உண்டு—தேவை என்று இந்த அடிகளார் கூட்டம், எவ்வளவு உரத்த குரலிலே எடுத்துக் கூறினாலும், நமக்குக் கவலையோ கலக்கமோ பிறப்பதில்லை — காரணமில்லை. நாம், கடவுள் கிடையாது என்று கூறி மெய்ப்பித்து ஆகவேண்டியதற்காகவே ஒரு இயக்கம் நடத்துவதாக அவர்களாக எண்ணிக்கொண்டால், தவறு நம்முடையதல்ல. கடவுள் தேவையில்லை என்று எடுத்துக் கூறி, அந்த 'சித்தாந்தத்தை' நாடு ஏற்றுக்கொள்ளவேண்டும் என்பதற்காகவே நாம் ஓர் இயக்கம் நடத்தவில்லை—அப்படி நடத்துவதாக அவர்களே தவறாக எண்ணிக்கொள்கிறார்கள் — பரிதாபப்படுகிறோம். நமது நோக்கம், கடவுள் மறுப்பு அல்ல; ஆகவேதான், மிகச் சிரமப்பட்டு, கால்கடுக்க நடந்தும், தவறு, தவறு, கார் தேயச் சுற்றுப் பயணம் செய்தும், வாய்வலிக்கப் பேசியும், கடவுள் உண்டு என்று அடிகள்போன்றார் 'உபதேசம்' செய்து வருவது கண்டு, நமக்கு ஏதோ ஒரு நஷ்டம் ஏற்பட்டுவருகிறது என்ற எண்ணம் தோன்றுவதில்லை; மாறாக, பாபம், நிழலுடன் அந்த நல்லவர் இவ்வளவு நீண்ட நேரம் போராடுகிறாரே என்று பரிதாபம்தான் பிறக்கிறது. நமது கேள்வி, கடவுள் உண்டா இல்லையா என்பதல்ல — கடவுள் யாருக்கு? என்பதுதான். அதோ, தொந்தி சரிய மயிரே வெளிர நிறைதந்த மனைய உடலே படைத்த காமாந்தகாரன், பாகு கனிமொழி மாதின் பாதம் வருடச் செல்கிறானே, அவன், பட்ட கடன் ஆயிரம், வட்டி தொடர் வட்டியுடன் சேர்ந்து ஆறு ஆக, அந்தக் கடனாளியின் வீட்டையும் தோட்டத்தையும் ஏலத்தில் எடுத்துக்கொண்டு, அவனை அழ அழ விரட்டியவனாயிற்றே, அவனல்லவா ஆறுமுகப் பெருமானுக்குத் தங்க மயில் வாகனம் செய்து தந்தான்; ஐயன் அவனுக்கு அருள்பாலிக்கலாமா—என்பது நமது கேள்வி. ஏழையை ஈடேற்ற, இல்லாமையை ஒழிக்க, பேதத்தைப் போக்க, பேதைமையை நீக்க, அன்பை வளர்த்திட அறநெறியைக் காட்டிட, கடவுளும் மதமும் பயன்படக் காணோமே! மாளிகையில் மகிழ்ச்சியும் குடிசையில் குமுறலும், உள்ளே வைரக் குவியலும், கோபுர வாயற்படியிலே குட்டமும், எத்தன் புன்னகையும் ஏமாளியின் பெருமூச்சும் இருக்கிறதே, இதனை மாற்றிட, திருத்திட, மார்க்கம் பயன்படக்கூடாதா என்பதே நமக்குள்ள கவலை. நாம் இந்த நோக்குடன் பிரச்சினையை ஆராயும்போது, கடவுள் உண்டு கடவுள் தேவை என்பதை முத்தமிழின் துணைகொண்டு எடுத்துக் கூறிப் பயன் என்ன? பாதிக்குதே பசி என்று கூறுபவனிடம், பச்சை வயலைக் காட்டிப் பயன் என்ன? பச்சை வயலில் செந்நெல் விளையும் என்பது அவனுக்குத் தெரியும்—விளைவது புளியேப்பக்காரனின் களஞ்சியமல்லவா சென்று குவிகிறது. வயலில் நெல் இல்லையா என்று பொறி பறக்கக் கேட்டுப் பயன் என்ன? பசி போக மார்க்கம் கேட்கிறார்கள். விளைவுமுறைபற்றி அல்ல, உழவுமுறைபற்றியுமல்ல! ஆனால், இந்தச் சொல்லேர் உழவர்களோ, ஆயிரமாயிரம் காரணம் காட்டவல்லோம், ஆதிபரம்பொருள் உண்டு என்ற உண்மைக்காக என்று பேசுகிறார்கள். நல்லவர்கள்! மிக நல்லவர்கள்! ஆனால் பாபம், பிரச்சினைக்கு வெகு தொலைவில் நின்றுகொண்டு பேசுகிறார்கள்.

அருகே வர முயற்சி எடுத்துக் கொண்டார், அடிகளார். எவ்வளவுதான் 'நாஸ்திக' ஒழிப்புப் பேசினாலும், அவர்போன்றார் உள்ளத்திலே, இது போதாது — ஏதேனும் உருப்படியான வேலை செய்தாக வேண்டும் என்ற எண்ணம் எழாமலிருக்கமுடியாது. எனவே அவர், மிகச் சாதாரணமான ஒரு மாற்றம் கூறினார்.

குன்றக்குடி அடிகளார் — பெயரைக் கவனித்தீர்களா, அடிகளார், ஸ்வாமிகளல்ல!

அவர் பேசுவதும், வெறும் பாகவதம் பாரதம் இராமாயணமல்ல, அடிக்கடி 'குறள்' பேசுகிறார், சங்க இலக்கியத்தின் சுவையையும் கூட்டித் தருகிறாராம்.

போதுமே! ஸ்வாமிகள் என்றல்ல அடிகளார் என்று தனித் தமிழ்ப் பெயர்! திருக்குறள், சங்க இலக்கியம்! ஒரு சாராரை மிரட்சி அடையச் செய்வதற்குப் போதுமான 'குற்றங்கள்' இவை. ஆயிரமாயிரம் மேடையிலே அவர் ஆஸ்திகம் பேசி என்ன, நாஸ்திகர்களைக் கண்டதுண்டமாக்குவேன் என்று கர்ஜனை செய்து என்ன, காவி அணிந்து என்ன, கடவுளைத் தொழுதென்ன, திருநீறு அணிந்தென்ன — அடிகளாராமே, அடிகளார்—ஏன், ஸ்வாமிகள் என்ற வார்த்தைக்கு என்னவாம், திருக்குறள்—தமிழர் நெறி—சங்க காலம்—தமிழ்நாடு—இதை எல்லாம் பேசுவானேன்—இராமதாஸ், கபீர்தாஸ், சோகாமேளா, மீரா இவைகளைப் பேசாமல், வரகுண பாண்டியனும், குலோத்துங்கனும், நக்கீரனும்—இப்படியல்லவா பேசுகிறார்—என்று 'குசுகுசு' கிளம்பிற்று!

நல்லவர்—நமக்கெல்லாம் மெத்த உபகாரம் செய்கிறார் — மதத்தை இரட்சித்து, மாபாவிகளை ஒழித்துக் கட்டுவார் என்று எண்ணி இவரைப் பாராட்டினோம், அர்ச்சனை செய்தோம்; இவரோ 'ஒரு மாதிரியாக'ப் பேசுகிறாரே, என்று புகார் கூறக் கிளம்பினர், பூதேவர்கள்!

புகார் காண்டம் பிறந்ததற்குக் காரணம், அடிகளார் கடவுட்காதை பேசியதுடன் நில்லாமல், வழக்குரை காதையும் கூறலானார். துவக்கம்தான், வேறல்ல! எனினும் அது போதுமே, சந்தேகத்தைக் கிளப்ப.

அடிகளார், மதத்துறைத் தலைவராக இருப்பதுடன் திருப்தி அடையவில்லை—தமிழராகவும் திகழ விரும்பினார், தமிழர் என்ற முறையில், அவர் மனதில் ஒரு வருத்தம் புகுந்து குடையலாயிற்று. தமிழ், தொன்மை, இனிமை வளம் எல்லாம் கொண்ட உயர் தனிச் செம்மொழி—அவர் அறிந்த உண்மை அது. அவர் காணும் காட்சியோ, அந்தத் தமிழ், கோயில்களில் இல்லை.

"விலை இப்படியே ஏறிக்கொண்டேதான் போகுங்களா, இல்லை, ஏதாவது இறங்குமுகம் உண்டா" என்று தமிழில் பேசுகிறார் வணிகச் சீமான் கோபுர வாயற்படியில். "வாருங்கோ செட்டியாரவாள்! இப்பதான் போனா; முக்கால் மணி நேரமா காத்துக்கொண்டிருந்தா" என்று தமிழில் தான் அர்ச்சகர் அவரிடம் பேசுகிறார். யார் வந்து போனது என்பதுபற்றிச் சிந்திக்கத் தொடங்கிவிடாதீர்கள்—காசுள்ள கனவானும் அவருடைய அந்தரங்கம் அறிந்த அர்ச்சகரும் அக்கரை காட்டும் ஒரு பாத்திரத்தின்மீது நமக்கேன் கவலை! தமிழிலே பேசியானதும், அர்ச்சனை தொடங்குகிறது — தமிழ் அல்ல!! நீண்டகாலமாக நடந்துவரும் இந்தத் 'தமிழ் நிந்தனை' தேவாலயங்களிலே இருந்துவருகிறது. மழலை, தமிழில்! காதல் மொழி, தமிழில்! கவிதை, தமிழில்! உரையாடல் தமிழில்! அங்காடியில்

தமிழ்! அர்ச்சகர் வீட்டில்கூடத் தமிழ்—இடத்துக்கேற்ற இயல்புடன்! எனினும், அர்ச்சனைக்குத் தமிழ் இல்லை! ஏன்?

ஏன்! ஆபத்தான வார்த்தை அல்லவா அது. அந்த ஒரு வார்த்தைதானே, ஒரு இயக்கத்தையே, நாஸ்திக இயக்கம் என்றுதூற்றுவதற்கானகாரணமாக அமைந்தது. எதற்கெடுத்தாலும் ஏன்? ஏன்? என்று கேட்பதைக் கண்டிக்கும் திருக்கூட்டத்தின் தலைவர்தானே அடிகளார்! பாருங்கள், அந்தப் பொல்லாத வார்த்தையின் போக்கிரித்தனத்தை—அவர் உள்ளத்திலே அந்த வார்த்தை புகுந்துவிட்டது!

ஏன் தமிழில் அர்ச்சனை செய்யக் கூடாது? தமிழ் நாட்டில், தமிழ் கூடாதா? நமது தெய்வத்துக்குத் தமிழ் தெரியாதா? ஏன், இப்படி ஒரு விபரீதமான முறை இருக்க வேண்டும்? ஏன் இதை மாற்றிடக் கூடாது? ஏன் தமிழில் அர்ச்சனை செய்யக்கூடாது? என்று கேட்கலானார்.

*

"நேக்கு அப்பவே தெரியும்."

"நான் சம்சயப்பட்டது சரியாகிப் போச்சு"

"ஆசாமியோட நடைநொடி பாவனைகளைப் பார்க்கும்போதே நேக்குச்சந்தேகம்தான்"

"ஏன் ஓய்! இப்பப் பிரமாதப்படுத்தறீர். நீரும்தானே அவன் பின்னோடு போயிண்டிருந்தீர்"—ஜே போட்டீர்.

"என்னமோ இந்தச் சூனாமானாக்களைக் கண்டித்துப் பேசுவது கேட்டு நேக்கு ஒரு திருப்தி. எல்லோரும் பக்திமானாக இருக்க வேணும், கோயில் குளத்தை இகழப்படாது, பூஜை புனஸ்காரத்தை விடப்படாது என்றேல்லாம் பேசி வந்ததால், நமது ஆசார அனுஷ்டானாதிகளுக்கு வருகிற ஆபத்து நீங்கி நமது மதாசாரம் எல்லாம் காப்பாத்தப்படும்னு நம்பினேன்."

'நம்பினீர்! அதனாலேதான் இப்ப ஒரு பெரிய கல்லாகத்தூக்கி நம்ம தலையிலே போடவரான் மனுஷ்யன்"

"லோகம் மந்திராதீனம், மந்திரம் பிருமணாதீனம் பிருமணா மமதேவதான்னு சிதோபதேசம் இருக்கே ஓய்!"

"இருக்கு ஓய்! இருக்கு. ஆனா இந்த அடிகள், கீதாபோதேசம் செய்கிறதில்லையே. திருக்குறள்னா பேசறது."

"அதனாலேதான், தேவாலயத்திலே தமிழிலே அர்ச்சனை செய்ய வேணும்னு "உபதேசம்" கிளம்பி இருக்கு"

"பாருமே, தைரியத்தை! யுக யுகாந்திரமா இருந்துண்டுவர ஒரு ஏற்பாடு — வேதாகம சம்மதத்தோட இருக்கிற ஒரு ஐதீகம், அதைப்போயி, நாசமாக்கக்கிளம்ப, எவ்வளவு நெஞ்சழுத்தம் வேணும்"

"ஏன் ஏற்படாது நெஞ்சழுத்தம். நாம்தான் தலைமேலே தூக்கிவைச்சிண்டு ஆடினமே"

"இப்படிப்பட்ட நிரீஸ்வரவாதி, பிரம்மத்துவேஷின்னுகண்டோமா! ஆசாமி என்னமோ திருநீறும் உருத்திராட்சமுமா இருக்கறதாலே நம்மிடம் பக்தி இருக்கும்னு எண்ணிண்டோம்."

"அதனாலேதான் இந்த விபத்து. தமிழுக்கு என்ன குறைன்னு கேட்கறான். எப்படி ஓய்! சொல்றது! தமிழிலே அது இருக்கு, இது இருக்கு என்கிறா. இருக்கட்டும். தேவாரம் இருக்கு திருவாசகம் இருக்கு என்கிறா. இருக்கட்டும். படிக்கட்டும். பாராயணம் செய்யட்டும், பக்திக்காகப் படிக்கட்டும், யாரும் தடை செய்யல்லே. ஆனா என்னதான் பொக்கிஷம் இருந்தாலும், தமிழ், தேவபாஷை யாகுமோ! இதைப் புரிந்துகொள்ளல்லையே!"

"யார் புரியாதவா! நீரும் நானும் ஒண்ணும் புரியாமத் திண்டாடறோம் ஓய்! அந்த அடிகளுக்கா ஒண்ணும் புரியாது! அடே அப்பா! எமகாதகப்பேர்வழி ஓய்! சமஸ்கிருதம், தமிழாளுடைய பாஷையல்ல, தமிழ் நாட்டுக் கோயிலிலே தமிழிலே அர்ச்சனைசெய்யாமலிருப்பது, தமிழுக்கு அவமானம், தமிழருக்கு இழுக்கு என்றல்லவா பேசுகிறான்."

"அப்படியானால், சமஸ்கிருதம் தேவபாஷையல்லவா?"

"சொல்லுவானேன் ஓய்! அந்த வெட்கக்கேட்டைவாய்விட்டுவேறே சொல்ல வேணுமா?"

"இரண்டுநாள் போனா சொல்லக் கூடத் துணிவு ஏற்பட்டுவிடும்."

இவ்விதம் இப்போது 'அர்ச்சனை' நடக்கிறது, அடிகளாருக்கு.

இன்னமும் அவர்மீது பாய்ந்து பிய்த்துப் பிடுங்காமலிருப்பதற்குக் காரணம், அவருடைய காவியும், அவர் நமது இயக்கத்தின்மீது கக்கிவரும் பகையும்தான்!

அடிகளார் மெத்த ஆயாசப்படுகிறார் என்று அறிகிறோம்.

இருந்து முக்கந்திருத்தி ஈரோடு பேன் வாங்கித்தான் அவர் பேசினார், காண்பதோ, சொல்லக் கூச்சமாக இருக்கிறது, சிண்டுகளைத் தட்டிவிட்டுக்கொண்டு, கிளம்பி விட்டிருக்கிறார்கள்.

கோயில் வேண்டாம் குளம் வேண்டாம், என்று அவர் கூறவில்லை — கூறுவாரா, அவரே கோயிலால் வளரும் கோமான்!

கோயிலில், தமிழருக்கு அவமானம் இருக்கவேண்டாம், தமிழுக்கு இழிவு தேடவேண்டாம், ஆண்டவனைப் பிரார்த்திப்பது புரியும்படி, தமிழிலே அர்ச்சனை இருக்கட்டும் என்கிறார்.

சற்றே சிரமமிருக்கிறது அதிலே—ஆதிகேசவா, வராக மூர்த்தி, ரிஷபாவாகன ரூடரே! என்பன போன்றவைகளைத் தமிழில் சொன்னால் அசங்கியமாகக்கூட இருக்கும்—என்று சமாதானம் பேசவில்லை அர்ச்சகர்கள் — தமிழுக்கு அந்த மகிமை கிடையாது என்று தட்டிப் பேசுகிறார்கள்! வடமொழிதான் மந்திர மொழி—தேவமொழி — தமிழ் அல்ல, என்று, அச்சமின்றி அவர்கள் கூறுகிறார்கள், கூச்சமின்றி கேட்டுக்கொள்ளும் கூனர்கள் நிரம்பியது தமிழ்நாடு என்ற எண்ணத்தில்.

பக்தி—ஆச்சார அனுஷ்டானம்—உள்ளம் நெக்குருக நிற்பது—கசிந்து கண்ணீர் மல்குவது—இறைவனிடம் தன்னை ஒப்படைப்பது—இவை எதுவும் பலன் அளிக்காது, அர்ச்சகர் சமஸ்கிருதத்தில் அர்ச்சனை செய்தால்தான், 'அருள்' கிட்டும் என்று நம்பச் சொல்கிறார்கள்—நம்பாதவன் நாஸ்திகனாக்கப்படுகிறான்.

இதமாகப் பேசுகிறார், எரிந்து விழுகிறார்கள்.

நான் வேறு என்று எண்ணிவிடாதீர்கள்—அடிகளார் — என்று எடுத்துக்காட்டுகிறார்—யாராய் இருந்தால் என்ன என்று புருவத்தை நெரிக்கிறார்கள்.

குருக்கள்மார்கள் கூட்டம் போட்டு, குன்றக்குடியாரின் யோசனையை ஏற்றுக்கொள்ளமுடியாது—அர்ச்சனை சமஸ்கிருதத்தில்தான் நடைபெறுகவேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றிவிட்டனர்; அடிகளார் முகத்தில் கரியை அப்பிவிட்டனர். கடம்பா! கச்சி ஏகம்பா! என்று அடிகளார் கதறுகிறார்!

இந்தச் சிறு சீர்திருத்தம் செய்வதற்கும் இயலாத நிலைகண்டு, இந்த மாறுதலையும் எதிர்க்கும் மகானுபாவர்களே ஆலய அதிபர்களாக இருக்கும் நிலைகண்டு, அடிகளாரின் எண்ணம் எங்கெங்கு பாய்ந்ததோ நாமறியோம். அவர்,

பேசுவதுபற்றிய செய்திகளில் நிரம்ப "தினத் தந்தி" கலந்துவிடுவதால், தெளிவாகத் திட்டமாக அவர் கருத்துரை கிடைக்கவில்லை. ஆயாசப்படுகிறார் என்பதுமட்டும் திட்டமாகத் தெரிகிறது. உறவு கொண்டாடத்தக்க அளவுக்கு அவர்களுடன் பழகிடும் அடிகளாருக்கே இந்தப் பரிசு—இந்த அர்ச்சனை கிடைக்கிறது என்றால்; நம் மீது அவர்கள் பாய்வதிலே, ஆச்சரியப்படுவதற்கில்லை.

அர்ச்சனை தமிழில் என்று இன்று கூறுகிறார்கள்—சரி என்று ஒப்புக்கொண்டால், அத்துடன் நிற்குமோ—அர்ச்சகர்கள் ஏன் தமிழர்களே இருத்தல் கூடாது என்று கேட்பர்—அத்துடன் நில்லாது, ஆலயத்தில் அவரவர் சென்று தொழுகை நடத்தி வரலாமே, இதற்கு அர்ச்சகர்என்றோர் தரகர் ஏன் என்று கேட்பார்கள்—பித்தம் வேகமாக வளரும்.—இது அர்ச்சகர்களின் எண்ணம்.

அவர்கள் எண்ணுவது அடியோடு தவறு என்றும் கூறிவிட முடியாது—காற்று அப்படித்தான் அடிக்கும்!!

நந்தன் நெருப்பில் குளித்த பிறகே நடேசனைக் காணமுடிந்தது-அப்படிப்பட்ட இடத்தில் இன்று வருந்தி வருந்தி அழைக்கிறார்கள் பழங்குடி மக்களை!! கால வேகத்தின் முன்பு, வைதீகம் நில்லாது நிலைக்காது என்பதைக்காட்டும் மகத்தான சம்பவமல்லவா இது.

அடிகளார், தமிழிலே அர்ச்சனை நடந்தால், இதுவரை கோயில்களுக்கு வராதிருந்தவர்களெல்லாம்கூட வருவார்கள் என்று ஆசைகாட்டியும் பேசினாராம்.

அந்த ஆசைக்குக் கட்டுப்பட்டால், பிறகு நிலைமை எப்படி எப்படி மாறிவிடுமோ என்ற அச்சம் அர்ச்சகர்களுக்கு—எனவே தலை தூக்கும்போதே தாக்கித் தகர்த்திட வேண்டும் என்று துணிந்துவிட்டனர்—அர்ச்சனை நடக்கிறது அடிகளாருக்கு.

அகோபில மடத்து ஜீயர், மந்திரங்கள் சமஸ்கிருதத்தில்தான் ஏற்பட்டன, வேறு பாஷைக்கு மாற்றினால் மந்திர சக்தி போய்விடும்—என்கிறார்.

அங்ஙனமாயின், என் தேவாரம், எவரையும் உருகவைக்கும் திருவாசகம்; என் ஐயனுக்கு ஏற்றவை அல்லவோ என்று கடாவுகிறார், அடிகளார்.

ஜீயர் ஸ்வாமிகள், விவாதத்தில் இறங்குவது வீண்வேலை என்று கருதுகிறார், எனவே கூறுவதை அழுத்தந் திருத்தமாகக் கூறிவிட்டு, பகவான்பேரில் பாரத்தைப் போட்டுவிடுகிறார்!

அடிகளார் விரும்பும் 'தமிழ் அர்ச்சனை'யை, கிளர்ச்சிமூலமாவது வெற்றிபெறச் செய்யத் துணிகிறபது என்று தமிழ் நாட்டில், தமிழ் தன்மானம், ஓரளவு அறிவுத் தெளிவுகொண்டோர் திரண்டு நிற்கின்றனர் என்று அறிந்து மகிழ்கிறோம்.

இந்தச் சூனமானுக்களுக்கும் ஆலய வழிபாடுபற்றியும் பக்தி குறித்தும் அக்கரை வந்ததுகாண் என்று பேசி நையாண்டி செய்கிறார் அடிகளார் என்கிறார்கள்.

இந்தக் 'காவிகட்டிக்கும்' தமிழ், தன்மானம் இவைபற்றி புரட்சிகரமான எண்ணம் உதித்ததே, ஏதேது, காலம் வெகு வேகமாக மாறுகிறது காணீர்! என்று பதில் கூறுவது கடினமல்ல.

நாம், இந்த அர்ச்சனை முறை மாறுவதைக்கொண்டு, மாபெரும் புரட்சி வெற்றிகரமாக நடந்தேறிவிட்டது என்று கருதிப் பொன்னார் மேனியனைப் போற்றுதும் என்று கூறித் திருப்திப்பட்டுவிடவில்லை.

இது துவக்கம்!

இதைத் தொடர்ந்து செய்யப்பட வேண்டியவை பலப்பல உள.

அவைகட்கு, அடிகளாரின் இந்த முயற்சி அடிகோலும் என்பதிலே தான் நமக்கோர் மகிழ்ச்சி.

தமிழ் நாட்டில் ஒன்றே குலமும் ஒருவனே தேவனும் என்ற கொள்கை இருந்தது.

சாதி சமயம் அனைத்தும் துரதிர்ஷ்டவசமாக பின்னால் தோன்றியவை. என்று சாதி ஒழிகின்றதோ, என்று தீண்டாமை ஒழிக்கப்படுகின்றதோ அன்றுதான் பக்தி நெறி உதயமாகும். சமயத்தை வாழ்வுச் சமயமாக மாற்றவேண்டும்.

வெறும் தத்துவச் சமயமாக, சடங்குச் சமயமாக இருக்கக்கூடாது.

இவை போன்ற கருத்துரைகளைத் தந்துவருகிறார் — இடையிடையே முருகன் பெருமை, கழுகுமலையின் மகிமை, கற்பூரார்த்தியின் மேன்மை போன்ற பூஜாரிப் பேச்சும் படமெடுத்தாடத்தான் செய்கிறது.

எனினும், இன்றுள்ள மதத்தின் தன்மையும் நிலையும், மக்கள் கொண்டுள்ள சமய முறையும், அவர் மனதுக்கு ஆயாசம் தருவதும், இதை மாற்றி அமைத்தாக வேண்டும் என்ற ஆவல் சுரப்பதும் தெரிகிறது—மகிழ்கிறோம்.

இதே முறையில், அடிகளார் கூறும் இந்தச் சிறிய, துவேஷமற்ற, சீர்திருத்தம் கூட, அர்ச்சகர்களின் உள்ளத்தில் அச்சத்தையும் ஆத்திரத்தையும் மூட்டிவிட்டிருக்கிறது.

அர்ச்சகர்களின் இந்தப்போக்கு, புன்னகை காட்டி வெல்ல வேண்டுமே தவிர போர்க்கோலம் பூண்டுப் பயனில்லை என எண்ணிடும் போக்கிலே உள்ள ஆச்சாரியார் போன்றவர்களுக்கு வருத்த மூட்டி இருக்கிறது.

இந்த அடிகளும் அனுவசியமாக இந்தப் பிரச்சினையைக் கிளப்பி இருக்கத் தேவையில்லை, இந்த அர்ச்சகர்களும், பிடிவாதம்காட்டிப் பேயாட்டம் போடுவதும் சரியில்லை, என்று அவர்கள் பேசுகிறார்கள்.

சிலர், வெடிப்புப் பிளவாகு முன்பு, ஏதேனும் 'ராஜி' செய்தாக வேண்டும் என்று விரும்புகிறார்கள்!

சிலர், இதுவும் சரி அதுவும் சரி என்று மழுப்பிப் பார்க்கிறார்கள்.

அடிகளார், இந்தச் சிறு வெற்றியும் பெற இடமளிக்காவிட்டால், பிறகு அவர் ஆஸ்திகத்தின் சார்பிலே எப்படி வெற்றிகரமாகப் பணியாற்ற முடியும் என்று சிலர் கேட்கின்றனர்.

அடிகளாரின் முக தாட்சணியத்துக்காக, இந்தப் பிரச்சினையில் விட்டுக்கொடுத்தால், போராட்டத்தின் அடுத்த கட்டமாக, அர்ச்சகர்களாக ஏன் ஐயரே இருக்க வேண்டும், அர்ச்சனை தெரிந்த தமிழரை ஏன் நியமிக்கக் கூடாது என்று பிரச்சினை கிளம்புமே, என்ன செய்வது என்று சிலர் பயத்துடன் கேட்கின்றனர்.

எப்படியும் தமிழில் அர்ச்சனை நடைபெறச் செய்தே தீருவேன்—சிவனாணை என்று சூளுரைத்திருக்கிறாராம் அடிகளார்!

அர்ச்சகர்களோ இதற்குத் துளியும் இடமளியோம் — பகவான்மீது பாரத்தைப் போட்டுவிட்டோம் என்று பேசுகிறார்களாம்.

தமிழில் அர்ச்சனை செய்வதை எதிர்ப்பதால், ஒரு குறிப்பிட்ட மொழியின்மீதும், ஒரு குறிப்பிட்ட சாரார்மீதும் தமிழருக்கு வெறுப்பும் ஆத்திரமும் ஏற்படும் என்று, ஈடன், மலடோவ், சோ-இன்-லாய் போன்றாரின் பாணியிலே அடிகள் பேசுகிறார். ஒரு குறிப்பிட்ட மொழி என்பது சமஸ்கிருதம்—ஒரு சாரார் என்பது பார்ப்பனர்!

இப்படியாகத்தானே இரு சாராருக்குள்ளே விவாதம்மூண்டு, ஒருவர்மீதொருவர் அர்ச்சனைகளை வீசிக்கொள்ளும் அதியற்புதமான கட்டத்திலே நாடு வந்து நிற்கிறது!!

★

Edited, Printed & Published by C. N. Annadurai M. A., at "Dravida Nadu" Press,
95 Tirukkachinambi St. Kancheepuram.